பக்கங்கள்:-22

காலை முரசு

## குழந்தை உட்பட மூவர் ரயில் மோதி மரணம்!

### களுத்துறையில் துயரம்

ரயில் மோதி குழந்தை உட்பட மூவர் பரிதாபகரமாக உயிரிழந்தனர்.

இந்தத் துயரச் சம்பவம் களுத்துறையில் நேற்று சனிக்கிழமை 06

முழக்கம்: 02 | வள்ளுவர் ஆண்டு 2055 | ஆடி 27 | ஞாயிற்றுக்கிழமை | 13.10.2024 | அதிர்வு 72

# தமிழரசின் வெற்றிக்காக நாம் உழைக்க வேண்டும்

## கிளிநொச்சியில் சிறீதரன் வலியுறுத்து





(எஸ்.நிதர்ஷன்)

"தற்போதைய களச்சூழலில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் வெற்றிக்காக நாங்கள் உழைக்க வேண்டும்." - என்று அக்கட்சியின் யாழ்ப்பாணம் மாவட்ட முதன்மை வேட்பாளரும் முன்னாள் நாடாளு மன்ற உறுப்பினருமான சிவஞா னம் சிறீதரன் தெரிவித்தார்.

கிளிநொச்சியில் அமைந்துள்ள இலங்கைத் தமிழரசுக் கட்சி அலு வலகமான அறிவகத்தில் நேற்று சனிக்கிழமை விஜயதசமி விழா வும், கிளிநொச்சி மாவட்டத்தின் தமிழரசுக் கட்சியினுடைய வட் டார உறுப்பினர்களுக்குமான கலந்துரையாடலும் நடைபெற் றது

இந்தக் கலந்துரையாடலின் பின்னர் ஊடகங்களுக்குக் கருத் துத் தெரிவிக்கும்போதே சிறீதரன் மேற்கண்டவாறு கூறினார். 06

## கொலை, கடத்தல் செய்யாதவர்கள் தமிழரசுக் கட்சியில் மட்டுமே போட்டி

### மட்டு. வேட்பாளர் அறிமுக நிகழ்வில் சாணக்கியன் தெரிவிப்பு



"தமிழ்த் தேசிய பரப்பில் கொலை செய்யாதவர்கள், கடத் தல் செய்யாதவர்கள், காட்டிக் கொடுக்காதவர்கள் இலங்கைத் தமிழரசுக் கட்சி சின்னத்தில் மட்டுமே போட்டியிடுகின்றனர். ஏனைய கட்சிகளில் இவ்வா றான தமிழ் மக்களுக்கு எதிரான செயற்பாடுகளை முன்னெடுத்த வர்கள் வேட்பாளர்களாக நிறுத் தப்பட்டுள்ளார்கள்."

– இவ்வாறு 06




வழமைக்கு மாறாக இம்முறை பொதுத் தேர் தல் ஊழல்,மோசடி, முறைகேடுகள், பதவித் துஷ்பிரயோகம் போன் றவற்றுக்கு எதிரான விவ காரமாக முக்கியமாக மாறி இருக்கின்றது.

இந்தப் பின்புலத்தில் இப்போது ஒரு விடயத்தை சுட்டிக் காட்டுவது தவிர்க்க முடியாதது.

கலைக்கப்பட்ட ஒன்பதாவது நாடாளு மன்றத்தின் நெறிமுறைகள் மற்றும் சிறப் புரிமைகள் தொடர்பான குழுவின் அறிக்கை கடந்த செப்டம்பர் 4 ஆம் திகதி நாடாளு மன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. அது தான் அந்த நாடாளுமன்றத்தின் கடைசி அமர்வு.

மேற்படி குழுவின் தலைவர் 06



# தீவகக் கடற்றொழில் அமைப்புக்களை புங்குடுதீவில் சந்தித்த கனேடியத் தூதர்

(ந.லோகதயாளன்)

"கடல் கடந்த தீவுகளில் சுமார் 1,500 மீனவர்கள். ஆனால், ஒரு எரிபொருள் நிலையம்கூட இல்லாதமை மீனவர்களின் பெரும் பிரச்சினையாகக் காணப்படுகின்றது." – என்று கனேடியத் தூதுவரிடம் சுட்டிக்காட்டப்பட்டது.

இலங்கைக்கான கனேடியத் தூதுவர் எரிக் வால்ஷ் யாழ்ப்பாணம், தீவகப் பகுதி கடற்றொழில் அமைப்புக்கள் மற்றும் தீவகப் பெண்கள் வலையமைப்பின் பிரதிநிதிகளை நேற்று சந்தித்துக் கலந்துரையாடினார்.

யாழ்.புங்குடுதீவு புனித பிரான்சிஸ் சவேரியார் சன சமூக நிலைய மண்டபத்தில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றது.

இதில் வடக்கு மாகாண கடற்றொழிலாளர் இணையத்தின் ஊடகப் பேச்சாளர் அன்னலிங்கம் அன்னராசா, மெசிடோ நிறுவனத்தின் பணிப்பாளர் யாட்சன் பிகிராடொ, தீவகப் பெண்கள் வலையமைப்பினர், தீவகப் பகுதி கடற்றொழில் அமைப்புக்களின் நெடுந்தீவு சமாசத் தலைவர் யூலியான் குரூஸ், நெடுந்தீவு, நயினாதீவு, அனலைதீவு பிரதேச மீனவப் பெண்கள் அமைப்பைச் சேர்ந்த மூவர் உட்படப் பலரும் கலந்துகொண்டனர்.







# பொலிஸ் உத்தியோகத்தரின் வீட்டில் நகை, பணம் திருட்டு!



யாழ்ப்பாணம், நவாலி பகுதியில் உள்ள பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரின் வீட்டில் நகைகள் மற்றும் ஒரு தொகை பணம் என்பன திருடப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

வீட்டின் குளியலறை ஊடாக உள்நுழைந்த திருடர்கள், ஆறரை பவுண் நகை மற்றும் 29 ஆயிரம் ரூபா பணம் என்பவற்றைத் திருடிச் சென்றுள்ளனர்.

இந்தச் சம்பவம் குறித்து மானிப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டது.

பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.



# பலத்த மழை, வெள்ளத்தால் 22 ஆயிரத்து 64 பேர் பாதிப்பு

பலத்த மழையுடனான வானிலையினால் நாட்டின் பல பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளதுடன் பல பிரதேசங்களுக்கு மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அத்தனகலு ஓயா தூனமலே பகுதியில் வெள்ள மட்டத்தை அண்மித்துள்ளது.

களனி கங்கை கொழும்பு நாகலகம்வீதி, ஹங்வெல்ல மற்றும் க்ளன்கோஸ் பகுதிகளில் சிறிய அளவிலான வெள்ள மட்டத்தை அண்மித்துள்ளதுடன் கிங் கங்கை பத்தேகம பகுதியில் சிறிய அளவிலான வெள்ள மட்டத்தை அண்மித்துள்ளதாக நீர்ப்பாசன திணைக்களம் தெரிவித்துள்ளது.

மேற்படி பகுதிகளை அண்மித்து தாழ்நிலப் பகுதிகளில் வாழும் மக்களை எச்சரிக்கையுடன் இருக்குமாறு நீர்ப்பாசன திணைக்களம் அறிவுறுத்தியுள்ளது.

நீர் மட்டம் உயர்ந்துள்ளதால் களனி கங்கையின் பல இடங்களில் முப்படையினரின் உதவியுடன் மணல் மூடைகளை பயன்படுத்தி தற்காலிக வெள்ளத்தடுப்பு அணைகளை அமைக்கும் ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டன என இடர் முகாமைத்துவ நிலையம் குறிப்பிட்டுள்ளது.

பலத்த மழை மற்றும் வெள்ளத்தால் 22,064 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என இடர் முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

9 மாவட்டங்களுக்கு மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

மேற்படி பகுதிகளில் வாழும் மக்கள் மிகுந்த கவனத்துடன் இருக்க வேண்டும் என தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

வளிமண்டலத்தில் ஏற்பட்டுள்ள தளம்பல் காரணமாக தற்போது நிலவும் மழையுடனான வானிலை தொடர்ந்தும் நீடிக்கும் சாத்தியம் தென்படுவதாக வளிமண்டலவியல் திணைக்களம் கூறியுள்ளது.

இதன் காரணமாக மேல், சப்ரகமுவ மாகாணங்களிலும் காலி, மாத்தறை மாவட்டங்களிலும் 100 மில்லிமீற்றருக்கு மேல் பலத்த மழை பெய்யலாம் என வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வுகூறியுள்ளது.

நாட்டின் ஏனைய பகுதிகளிலும் 75 மில்லி மீற்றருக்கும் அதிகமான மழை பதிவாகும் வாய்ப்புள்ளதாகவும் வளிமண்டலவியல் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

# 50 இற்கும் மேற்பட்ட பிரபல அரசியல்வாதிகள் பொது தேர்தலில் போட்டியிடாத முதல் சந்தர்ப்பம்



மஹிந்த ராஜபக்ஷ , ரணில் விக்கிரமசிங்க, பாட்டலி சம்பிக ரணவக, விமல் வீரவன்ஸ போன்ற பிரபல அரசியல்வாதிகள் பலர் பொதுத் தேர்தலில் போட்டியிடாத முதல் சந்தர்ப்பம் இதுவென தேர்தல் கண்காணிப்பு அமைப்புகள் தெரிவித்துள்ளன.

இதன் காரணமாக இந்த தேர்தல் தீர்மானமிக்கதாக மாறியுள்ளதாக சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தலுக்கான மக்கள் அமைப்பின் நிறைவேற்று பணிப்பாளர் ரோஹண ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார்.

இம்முறை 50 இற்கும் மேற்பட்ட பிரபல அரசியல்வாதிகள் பொதுத் தேர்தலில் போட்டியிடவில்லை என ஜன நாயக மறுசீரமைப்பு மற்றும் தேர்தல் கண்காணிப்பு நிறுவனத்தின் நிறைவேற்று பணிப்பாளர் மஞ்சுள கஜநாயக்க தெரிவித்துள்ளார்.

# நச்சுதன்மையான ரின்மீனை திருப்பி அனுப்ப நடவடிக்கை



நச்சுதன்மையுடைய ரின்மீன் தொகையை திருப்பி அனுப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டதாக சுற்றாடல், வனஜீவராசிகள், வனவள, நீர்வழங்கல், பெருந்தோட்டத்துறை மற்றும் சமூக உட்கட்டமைப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

மேற்படி ரின்மீன் தொகை 2021 ஆம் ஆண்டு இறக்கு மதி செய்யப்பட்டிருப்பதாக அமைச்சின் செயலாளர் பிரபாத் சந்ரகீர்த்தி தெரிவித்துள்ளார்.

இந்த ரின்மீன் தொகை 215,000 டொலர் பெறுமதியா னது என மதிப்பிடப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

பயன்பாட்டுக்கு எடுத்துக்கொள்ளும் ஒரு கிலோ கிராம் ரின்மீனில் ஆசனிக் அமிலமானது ஒரு கிராம் அல்லது அதற்கு குறைவான அளவில் காணப்பட வேண்டிய போதிலும், மேற்படி ரின்மீன் தொகையில் 1.3 கிராம் அளவில் ஆசனிக் அமிலம் காணப்படுகின்றமை உறுதி செய்யப்பட்டுள்ளதாக செயலாளர் தெரிவித்துள்ளார்.

இதனால், மனித நுகர்வுக்கோ, விலங்குகளுக்கு உணவளிக் கவோ அதனை பயன்படுத்த முடியாதென அமைச்சின் செயலாளர் குறிப்பிட்டார்.

வெளிநாடுகளிலிருந்து நச்சு பொருள்களை நாட்டுக்கு கொண்டுவருவதற்கும் அதனை மனித நுகர்வுக்கு பயன்படுத் துவதற்கும் ஒருபோதும் இடமளிக்கப் போவதில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

# பிரதமரின் படத்தை பயன்படுத்தத் தடை



அரச நிறுவனங்களின் ஊடாக நடத்தப்படும் வெவ்வேறு நிகழ் வுகள் மற்றும் வேலைத்திட்டங்களின் போது பிரதமர் கலாநிதி ஹரினி அமரசூரியவின் படத்தைப் பயன்படுத்துவதற்கு அனுமதி பெறப்பட வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

பிரதமர் அலுவலகம் விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

இது தொடர்பான அறிவுறுத்தல் பிரதமரின் செயலாளர் பிரதீப் யசரத்வின் கையெழுத்துடன் சகல அரச நிறுவனங்களுக்கும் அனுப்பப்பட்டுள்ளது.

# வெள்ள அபாயம் குறித்து சிவப்பு எச்சரிக்கை விடுப்பு



சீரற்ற வானிலை காரணமாக ஆறுகளின் நீர்மட்டம் அதிகரித்து வருவதாக நீர்பாசனத்திணைக்களம் தெரிவித் துள்ளது.

இதன்படி களனி கங்கையை அண்மித்த தாழ் நிலப்பகு திகளில் வெள்ளம் ஏற்படுவதற்கான வாய்ப்பு காணப்படு வதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்துடன், களுகங்கையின் நீர்மட்டமும் அதிகரித்து வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. குடா ஓயாவின் நீர்மட்டம் அதிகரித்து வருவதுடன் அதனை அண்மித்த தாழ் நிலப்பகு திகளுக்கு வெள்ள அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன், அத்தனகலு ஓயாவை அண்மித்த பகுதிக ளுக்கு வெள்ள அபாயம் குறித்து சிவப்பு எச்சரிக்கை விடுக்கப் பட்டுள்ளது.

இதேவேளை வெள்ளப் பெருக்கு காரணமாக தெற்கு அதிவேக நெடுஞ்சாலையின் கடுவலை வெளியேறும் பகுதி மூடப்பட்டுள்ளது.

அத்துடன் கடவத்த நோக்கிச் செல்வதற்கு கனரக வாக னங்களுக்கு மாத்திரமே அனுமதி வழங்கப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அதேநேரம், வெள்ளப் பெருக்கு காரணமாகத் தற்காலிக மாக மூடப்பட்ட வெலிப்பென்ன நுழைவு மீண்டும் திறக்கப் பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# தேர்தல் செலவு அறிக்கையை சமர்ப்பிப்புக்கான கால அவகாசம் இன்றுடன் நிறைவடைகின்றது




ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்ட வேட்பாளர்களுக்கு, தங்களது தேர்தல் செலவு அறிக்கையை சமர்ப்பிப்பதற்கான கால அவகாசம் இன்று பிற்பகல் 3 மணியுடன் நிறைவடையவுள்ளதாகத் தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

எவ்வாறாயினும், இதுவரையில் 8 பேர் மாத்திரமே தங்களது செலவு அறிக்கையை சமர்ப்பித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

செலவு அறிக்கையை வழங்காத வேட்பாளர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க முடியும் எனவும் தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

## டெங்கு நோயாளர்கள் 40,494 பேர் அடையாளம்



இந்த வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் 40,494 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என தேசிய டெங்கு நோய் கட்டுப்பாட்டுப் பிரிவு தெரிவித்துள்ளது.

டெங்கு நோயினால் தொடர்ந்தும் மேல் மாகாணத்தில் வசிப்பவர்களே அதிகளவில் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதன்படி, மேற்படி மாகாணத்தில் 17,159 பேர் டெங்கு நோயினால் பாதிக்கப்பட்டுள்ளனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேநேரம், இதுவரையான காலப்பகுதியில் டெங்கு நோயினால் 20 பேர் உயிரிழந்துள்ளனர் என தேசிய டெங்கு நோய் கட்டுப்பாட்டுப் பிரிவு தெரிவித்துள்ளது.

## மண்சரிவு எச்சரிக்கை மேலும் நீடிக்கப்பட்டது



9 மாவட்டங்களுக்கு விடுக்கப்பட்ட மண்சரிவு அபாய முன்னெச்சரிக்கை நீடிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, கொழும்பு, நுவரெலியா, பதுளை, இரத்தினபுரி, களுத்துறை, கேகாலை, காலி, கம்பஹா மற்றும் குருநாகல் ஆகிய பகுதிகளுக்கே இவ்வாறு மண்சரிவு அபாய முன்னெச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, நிலவும் சீரற்ற காலநிலையினால் இதுவரை 5,349 குடும்பங்களைச் சேர்ந்த 22,069 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என அனர்த்த முகாமைத்துவ நிலையம் குறிப்பிட்டுள்ளது.

## மரக்கறிகளின் விலை வீழ்ச்சி



தற்போது நிலவும் மழையுடனான வானிலை காரணமாக சந்தையில் மரக்கறிகளின் விலையும் வீழ்ச்சியடைந்துள்ளதாக வர்த்தகர்கள் தெரிவிக்கின்றனர்.

இதன்படி பேலியகொடை மெனிங் சந்தையில் ஒரு கிலோகிராம் கெரட் 100 ரூபாவாகவும், ஒரு கிலோகிராம் போஞ்சி 280 ரூபாவாகவும் பதிவாகியுள்ளது.

அத்துடன், ஒரு கிலோ கிராம் வெண்டைக்காய் 160 ரூபாவிற்கும், ஒரு கிலோ கிராம் பாகற்காய் 350 ரூபாவிற்கும் விற்பனை செய்யப்படுகின்றது.

இதேவேளை, மீன் உள்ளிட்ட கடலுணவுகளின் விலையும் குறைவடைந்துள்ளன.

நிலவும் மழையுடனான காலநிலையை அடுத்து மீன் வகைகளின் விலை குறைந்துள்ளதாக வர்த்தகர்கள் குறிப்பிடுகின்றனர்.

## சுற்றுலா பயணிகளின் வருகை அதிகரிப்பு



இந்த மாதத்தின் கடந்த 9 ஆம் திகதி வரையான காலப்பகுதிக்குள் 36 ஆயிரத்து 877 சுற்றுலாப்பயணிகள் நாட்டுக்கு வருகைதந்துள்ளனர்.

இதன்படி, இந்தியாவிலிருந்து 10,857 பேரும் சீனாவிலிருந்து 3,105 பேரும், ஜேர்மனியிலிருந்து 2,425 பேரும் நாட்டுக்கு பிரவேசித்துள்ளனர்.

அதேநேரம், இந்த வருடத்தின் இதுவரையான காலப்பகுதிக்குள் 15 லட்சத்து 21 ஆயிரத்து 685 சுற்றுலாப்பயணிகள் நாட்டுக்கு வருகைதந்துள்ளனர்.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

சமல் ராஜபக்ஷ தலைமையிலான விசாரணை குழு தனக்கு கிடைத்த முறைப்பாடுகள் தொடர்பில் விசாரணைகளை நடத்தி தனது அவதானிப்பை அந்த அறிக்கையில் விவரித்து இருந்தது.

அந்தக் குழு விசாரித்த முறைப்பாடுகளில் ஒன்று முன்னர் அமைச்சராக இருந்த டபிள்யூ.டி.ஜே.செனவிரத்ன சமர்ப்பித்த புகாராகும்.

இலங்கை மின்சார சபையின் தொழிற்சங்க தலைவரான ரஞ்சன் ஜெயலால் என்பவர் தம்மைப் பற்றி ஹிரு டிவியில் தெரிவித்த கருத்துக்கள் தொடர்பில் அந்த முறைப்பாட்டை செனவிரத்ன சமர்ப்பித்திருந்தார்.

தாம் அமைச்சர் என்ற முறையில் பயன்படுத்திய இல்லத்துக்கான மின்சார நிலுவை கட்டணங்கள் பல லட்சத்தை தாம் செலுத்தவில்லை என்று மேற்படி ரஞ்சன் ஜெயலால் பகிரங்கமாக தெரிவித்த கருத்து ஹிரு தொலைக்காட்சியில் ஒளிபரப்பானமை குறித்து அந்த முறைப்பாட்டை செனவிரத்ன செய்திருந்தார்.

கொழும்பு - 5, கெப்பிற்றிப்பொல மாவத்தையிலுள்ள அந்த இல்லம் தொடர்பான சர்ச்சையில் செனவிரத்னன வின் தரப்பில் ஆஜரான சட்டத்தரணி முன்வைத்த கருத்து ஒன்று முக்கியமானது.

சம்பந்தப்பட்ட இல்லத்தை 2002 ஏப்ரல் முதல் 2006 அக்டோபர் வரை சிவாகிலிங்கம் பயன்படுத்தி வந்தார் என்றும், அந்தக் காலகட்டத்தில் மின்சார நிலிவை அந்தக் கட்டடத்துக்கு 16 லட்சத்து 3 ஆயிரத்து 129 ரூபா 19 சதம் என்றும், அந்த நிலுவை தமது கட்சிக்காரரான செனிவிரத்னவின் கணக்கில் காட்டப்பட்டு இருக்கின்றது என்றும் அந்த விசாரணையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இது அந்தக் குழுவின் அறிக்கையில் விவரிக்கப்பட்டுள்ளது.

அது உண்மையாயின், மேற்படி காலத்தில் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த சிவாஜிலிங்கம் தாம் பயன்படுத்திய இல்லத்தின் மின்சார நிலுவையான 16 லட்சம் ரூபாவை இன்னும் செலுத்தாமல் இருக்கின்றாரா என்ற கேள்வி எழுகின்றது.

அப்படி செலுத்தவில்லையானால் அதுவும் அரச பதவி நிலையை துஷ்பிரயோகம் செய்த குற்றமாக மாறிவிடாதா என்று கேள்வி எழுந்திருக்கின்றது.

இப்போது தேர்தலில் சங்குச் சின்னத்தின் சார்பில் களம் இறங்கி இருக்கும் சிவாஜிலிங்கம் முன் இந்த விவகாரம் சமர்ப்பணம்.

விளக்கம் தர வேண்டியது அவரது பொறுப்பு.

---

## கொலை, கடத்தல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட முதன்மை வேட்பாளரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான இரா.சாணக்கியன் தெரிவித்தார்.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் சார்பில் மட்டக்களப்பு மாவட்டத்தில் போட்டியிடவுள்ள வேட்பாளர்களின் அறிமுக நிகழ்வும் ஊடக சந்திப்பும் மட்டக்களப்பு, கல்லடியில் உள்ள தனியார் விடுதியில் நேற்று நடைபெற்றது.

இம்முறை நாடாளுமன்றத் தேர்தலில் மட்டக்களப்பு மாவட்டத்தில் போட்டியிடவுள்ள இலங்கைத் தமிழரசுக் கட்சி வேட்பாளர்கள் இதன்போது கருத்துத் தெரிவித்தனர்.

அந்தவகையில், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் கூறுகையில்,

“நீண்ட காலத்துக்குப் பின்னர் தூய்மையான தமிழரசுக் கட்சியின் உறுப்பினர்களைக் கொண்ட வேட்பாளர்களைக் கொண்டு இலங்கை தமிழரசுக் கட்சி களமிறங்கியுள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் ஏனைய கட்சிகளில் போட்டியிடும் தமிழ் வேட்பாளர்களுடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போது எமது வேட்பாளர்கள் சிறந்த வேட்பாளர்கள் என்ற கருத்து நிலவுகின்றது.

எமது கட்சியில் ஊழலற்ற, கடந்த காலத்தில் மோசடிகளில் ஈடுபடாதவர்களை எமது வேட்பாளர் பட்டியலில் உள்வாங்கியுள்ளோம்.

ஏனைய கட்சிகள் இது தொடர்பில் பேச முடியாது. கடந்த காலத்தில் ஊழல், மோசடிகளில் அதிகளவில் ஈடுபட்டவர்கள் ஏனைய கட்சிகளில் போட்டியிடுகின்றார்கள்.

தமிழ்த் தேசிய பரப்பில் கொலை செய்யாதவர்கள், கடத்தல் செய்யாதவர்கள், காட்டிக்கொடுக்காதவர்கள் இலங்கைத் தமிழரசுக் கட்சி சின்னத்தில் மட்டுமே போட்டியிடுகின்றனர். ஏனைய கட்சிகளில் இவ்வாறான தமிழ் மக்களுக்கு எதிரான செயற்பாடுகளை முன்னெடுத்தவர்கள் வேட்பாளர்களாக நிறுத்தப்பட்டுள்ளார்கள்.

ஏனைய பிரதான கட்சிகளை பார்த்தால் தமிழ் பேசும் மக்களாகவே களமிறக்கப்பட்டுள்ளார்கள். ஐக்கிய மக்கள் சக்தி, தேசிய மக்கள் சக்தி இரண்டிலும் இரு இனங்களையும் சேர்ந்தவர்கள் போட்டியிடுகின்றார்கள். முன்னாள் இராஜாங்க அமைச்சர் ஒருவரின் வேட்புமனு நிராகரிக்கப்பட்டிருந்தது.

கடந்த காலத்தில் எமது கட்சியின் வேட்பாளர் தெரிவின்போது சிற்சில விமர்சனங்கள் இருந்தன. ஆனாலும், மட்டக்களப்பு மாவட்ட தமிழ் மக்களுக்கு தமிழரசுக் கட்சியை ஆதரிக்கக்கூடிய வகையில் வேட்பாளர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள்.

கடந்த காலத்தில் போட்டியிட்ட இருவர் மட்டுமே இம்முறை போட்டியிடுகின்றோம். ஏனைய 6 வேட்பாளர்களும் புதிய முகங்களாகக் களமிறக்கப்பட்டுள்ளார்கள்.

கடந்த நான்கு வருட காலப்பகுதியில் மட்டக்களப்பு மாவட்டத்தில் நான்கு நாடாளுமன்ற உறுப்பினர்கள் தெரிவாகியிருந்தாலும் கூட இலஞ்சம், ஊழல் மோசடி, காணி அபகரிப்பிலேயே அவர்களின் காலங்களைக் கடத்தியிருந்தார்கள். இன்னுமொருவர் இதுதான் நான் இறுதி முறை என்று தேர்தலில் போட்டியிட்டு அவரது கூடுதலான காலத்தினை இலண்டனில் கழித்துவிட்டு தேர்தலில் குதித்திருகின்றார்.

அந்தவகையில் மட்டக்களப்பு மாவட்ட மக்களுக்குத் தெரியும் தமிழரசுக் கட்சி சார்பாகப் போட்டியிட்டு வெற்றி பெற்று நாடாளுமன்றம் சென்ற ஒரேயொருவர் நான். மட்டக்களப்பு மாவட்டத்தின் சகல பிரதேசங்களிலும் சகல வேலைத்திட்டங்களையும் முன்னெடுத்திருக்கின்றோம்.

மட்டக்களப்பு மாவட்டத்தின் அனைத்து பகுதிகளிலும் எனது வேலைத்திட்டங்களை முன்னெடுத்திருக்கின்றேன். நாங்கள் மட்டக்களப்பு மாவட்டத்தில் நான்கு ஆசனங்களைப் பெற வேண்டும் என்பதற்காகவே உழைத்துக்கொண்டிருக்கின்றோம்.” - என்றார்.

---

## குழந்தை உட்பட...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மாலை இடம்பெற்றது.

மாத்தறையில் இருந்து கொழும்பு நோக்கிப் பயணித்த ரயிலில் மோதியே மேற்படி மூவரும் உயிரிழந்தனர்.

இருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்ததுடன், மூன்று வயது குழந்தை காயமடைந்த நிலையில் களுத்துறை போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தது.

உயிரிழந்த மூவரும் களுத்துறை தெற்கு, ரஜவத்த பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது.

---

## தமிழரசின் வெற்றி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அவர் மேலும் தெரிவிக்கையில்,

“நாங்கள் கடந்த ஜனாதிபதித் தேர்தலில் ஒரு தமிழ்ப் பொது வேட்பாளரை ஆதரித்தவர்கள். தமிழ் மக்களுக்கான பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக எங்களது முழுச் செயற்பாடுகளையும் முன்னிறுத்தி இருந்தோம்.

குறிப்பாக தமிழ் மக்களுக்கு நடைபெற்ற இனப்படுகொலைக்கான நீதி, வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான நீதி, தமிழ் மக்களுக்கு வடக்கு - கிழக்கு இணைந்த அரசியல் தீர்வு ஆகிய கோரிக்கைகளை முன்வைத்து நாங்கள் தமிழ்ப் பொது வேட்பாளரை ஆதரித்தவர்கள் என்பது உண்மையாகும்.

அதற்காகப் பாவிக்கப்பட்ட சங்கு சின்னத்தை வேறு சிலர் கையில் எடுத்திருப்பது என்பது முரண்பாடான ஒரு விடயமாகும். அதனை அவர்கள் அவ்வாறு செய்திருக்கக் கூடாது என்பது எனது கருத்தாகும்

குறிப்பாக தமிழரது ஒற்றுமை, தேசத் திரட்சி, தமிழர்களை ஒன்றுபடுத்துதல் போன்ற காரியத்துக்காக ஆற்றப்பட்ட அந்த விடயத்தில் தமது சின்னமாக அதனைக் கையில் எடுத்திருப்பது ஒரு முரணான விடயம்

ஜனாதிபதித் தேர்தல்கள் நடைபெறுகின்றன. பல்வேறு சின்னங்களுக்காக மக்கள் வாக்களிக்கின்றார்கள். அந்த அடிப்படையிலே நாங்களும் ஒரு தமிழ்ப் பொது வேட்பாளரை நிறுத்தி அவருக்கு ஆதரவுகளை வழங்கி இருக்கின்றோம்.

நாடாளுமன்றத் தேர்தலுக்கான

07

# தேர்தலில் போட்டியிடப் போவதில்லை; அஜித் மான்னப்பெரும அறிவித்தார்

கம்பஹா மாவட்டத்தில் ஐக்கிய மக்கள் சக்தியின் கீழ் வேட்பு மனுவை சமர்ப்பித்துள்ள முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அஜித் மான்னப்பெரும, எதிர்வரும் பொதுத் தேர்தலில் போட்டியிடப் போவதில்லை என அறிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு அவர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

12 வருடங்களாகத் தாம் வகித்து வந்த தொகுதி அமைப்பாளர் பதவியிலிருந்து தம்மை நீக்கிவிட்டு, தமக்குத் தெரியாமலேயே வேறு ஒருவரை அந்தப் பதவிக்குக் கட்சித் தலைவர் சஜித் பிரேம தாஸ நியமித்துள்ளார் என அவர் தெரிவித்துள்ளார்.

எனவே, வேட்பு மனுவில் கையெழுத்திட்டதன் பின்னர் எடுக்கப் பட்ட இந்த தீர்மானத்தினால் தாம் அதிருப்தி அடைந்துள்ளமை யினால், எதிர்வரும் பொதுத்தேர்தலில் போட்டியிடாதிருக்க முடிவு செய்துள்ளதாக ஐக்கிய மக்கள் சக்தியின் முன்னாள் நாடாளு மன்ற உறுப்பினர் அஜித் மான்னப்பெரும அறிவித்துள்ளார்.



# உயிரை மாய்த்துக் கொள்ளும் சம்பவங்கள் அதிகரிப்பு

இலங்கையில் உயிரை மாய்த்துக் கொள்ளும் சம்பவங்கள் அதிகரித்துள்ளன என இலங்கை உளநல வைத்தியர் சங்கம் தெரிவித்துள்ளது.

கொழும்பில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கருத்துரைத்த அந்த சங்கத்தின் செயலாளர் சஜீவன அமரசிங்க இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

“சர்வதேச ரீதியாக இந்த ஆண்டில் மாத்திரம் 720,000 இற்கும் அதிகமானோர் தமது உயிரை மாய்த்துக் கொண் டனர்.

இலங்கையில் நாளொன்றுக்கு 8 பேர்வரை உயிரை மாய்த்துக் கொள்கின்றனர்.

பல மனநல காரணங்கள் இதில் தாக்கம் செலுத்துகின்றன. அவற்றில் மன அழுத்தம் பிரதான பிரச்சினையாகவுள்ளது.

பிரச்சினைகளை எதிர்நோக்குவதில் உள்ள சிக்கல்கள் காரணமாகவும் இவ்வாறான சம்பவங்கள் இடம்பெறுகின் றன.



இலங்கையில் இதனைத் தடுப்பதற்கு அனைவரும் ஒன்றிணைய வேண்டும்.

அவ்வாறு மன அழுத்தம் உள்ளிட்ட பிரச்சினை களை எதிர்நோக்குவோரை அடையாளம் கண்டு, அவர்க ளுக்கான சிகிச்சைகளை வழங்க வேண்டும்.” – என் றார்,

## தமிழரசின் வெற்றி...

(6ஆம் பக்கத் தொடர்ச்சி...)

தமிழரசுக் கட்சியின் வேட்பாளர்கள் நியமனங்களில் திருப்தி இருக்கின்றதா, இல்லையா என்பதற்கு அப்பால் இப்போதைய களச்சூழலில் கட்சியினுடைய வெற்றிக்காக நாங்கள் உழைக்க வேண்டும். இதுவே எனது நிலைப்பாடு.” – என்றார்.

மேற்படி கலந்துரையாடலில் கிளிநொச்சி மாவட்டத்தின் உள்ளூராட்சி மன்றங்களின் முன்னாள் உறுப்பினர்கள், தமிழரசுக் கட்சியின் செயற்பாட்டாளர்கள், ஆதரவாளர் கள் எனப் பலரும் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத் தக்கது.








# கொழும்பில் அதிகளவான வேட்பாளர்கள் போட்டி

எதிர்வரும் பொதுத் தேர்தலில் கொழும்பு மாவட்டத்திலேயே அதிகளவான வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர்.

இந்த ஆண்டு பொதுத் தேர்தலில் 22 தேர்தல் மாவட்டங்களிலும் மொத்தமாக 8,388 வேட்பாளர்கள் போட்டியிடுகின்றன.

பொதுத் தேர்தலுக்காக நாடளாவிய ரீதியில் அரசியல் கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்களால் 764 வேட்பு மனுக்கள் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

அவற்றில் 74 வேட்பு மனுக்கள் நிராகரிக்கப்பட்டுள்ளன.

இதன்படி, பொதுத் தேர்தலில் போட்டியிடுவதற்கு 690 வேட்புமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளன.

நாடாளுமன்றத்தில் உள்ள 225 ஆசனங்களுக்காக 196 நாடாளுமன்ற உறுப்பினர்கள் மக்களின் வாக்கு மூலமும் 29 பேர் தேசிய பட்டியல் மூலமும் தெரிவு செய்யப்படவுள்ளனர்.

இந்த முறை பொதுத்தேர்தலில் கொழும்பு மாவட்டத்திலேயே அதிகளவாக வேட்பாளர்கள் களமிறங்கியுள்ளனர்.

அதன்படி, கொழும்பு மாவட்டத்தில் 18 ஆசனங்களுக்காக 966 வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர்.


அத்துடன், கம்பஹா மாவட்டத்தில் 19 ஆசனங்களுக்காக 902 வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர்.

இந்த முறை பொதுத் தேர்தலில் அதிக அரசியல் கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்களைக் கொண்ட திகாமடுல்ல தேர்தல் மாவட்டத்தில் 7 ஆசனங்களுக்கு 640 வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர்.

மொனராகலை மாவட்டத்தில் 6 ஆசனங்களுக்கு 135 பேரும், பொலன்னறுவை மாவட்டத்தில் 5 ஆசனங்களுக்கு 120 பேரும் போட்டியிடுகின்றனர்.

இரண்டு மாவட்டங்களிலும் தலா 15 கட்சிகளும் சுயேச்சை குழுக்களும் தேர்தலில் போட்டியிடுகின்றன.

ஏனைய மாவட்டங்களுடன் ஒப்பிடுகையில் மொனராகலை மற்றும் பொலனறுவை ஆகிய இரண்டு மாவட்டங்களிலேயே குறைந்தளவான வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.



பாராளுமன்ற தேர்தல் 2024

இலங்கை தமிழரசுக் கட்சியின் யாழ்ப்பாண தேர்தல் மாவட்ட வேட்பாளர் அறிமுக விழா

இடம் :- யாழ்ப்பாணம் தந்தை செல்வா அரங்கம்

காலம் :- ஞாயிற்றுக்கிழமை (13/10/2024)

நேரம் :- பிற்பகல் 3.00 மணி

கட்சி ஆதரவாளர்கள் பொதுமக்கள் அனைவரும் கலந்து சிறப்பிக்கவும்

-இலங்கை தமிழரசுக் கட்சி - யாழ் மாவட்டம் -

**நமது கருத்து**

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# தற்கொலைப் பாதிப்பு

இலங்கையில் உயிரை மாய்த்துக் கொள்ளும் சம்பவங்கள் அதிகரித்துள்ளன என இலங்கை உளநல வைத்தியர் சங்கம் தெரிவித்துள்ளது.

கொழும்பில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கருத்துரைத்த அந்த சங்கத்தின் செயலாளர் சஜீவன அமரசிங்க இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

“சர்வதேச ரீதியாக இந்த ஆண்டில் மாத்திரம் 720,000 இற்கும் அதிகமானோர் தமது உயிரை மாய்த்துக் கொண்டனர்.

“இலங்கையில் நாளொன்றுக்கு 8 பேர்வரை உயிரை மாய்த்துக் கொள்கின்றனர். பல மனநல காரணங்கள் இதில் தாக்கம் செலுத்துகின்றன. அவற்றில் மன அழுத்தம் பிரதான பிரச்சினையாகவுள்ளது. பிரச்சினைகளை எதிர்நோக்குவதில் உள்ள சிக்கல்கள் காரணமாகவும் இவ்வாறான சம்பவங்கள் இடம்பெறுகின்றன. இலங்கையில் இதனைத் தடுப்பதற்கு அனைவரும் ஒன்றிணைய வேண்டும். அவ்வாறு மன அழுத்தம் உள்ளிட்ட பிரச்சினைகளை எதிர்நோக்குவோரை அடையாளம் கண்டு, அவர்களுக்கான சிகிச்சைகளை வழங்க வேண்டும்.” - என்று அவர் குறிப்பிட்டிருக்கின்றார்.

தற்கொலை சம்பவங்களில் இலங்கை உலகில் 21 ஆவது இடத்தில் உள்ளதாக அவர் சுட்டிக்காட்டினார்.

இலங்கையில் 3 மணித்தியாலத்துக்கு ஒருவர் என்ற அடிப்படையில் நாளொன்றுக்கு 9 பேர் தற்கொலை செய்துகொள்கின்றனர் என்பது பேராதனைப் பல்கலைக்கழக ஆய்வொன்றின் மூலம் தெரியவந்துள்ளது.

கடந்த 3 வருடங்களில் மாத்திரம் 9,700 தற்கொலை சம்பவங்கள் பதிவாகியுள்ளன. கடந்த வருடத்தில் மாத்திரம் 3406 பேர் தற்கொலை செய்துகொண்டுள்ளனர். அந்த எண்ணிக்கை அதற்கு முன்னைய வருடத்துடன் ஒப்பிடும் போது 10 சதவீதத்தால் அதிகரித்துள்ளது.

மேலும் தற்கொலை செய்து கொண்டவர்களில் நூற்றுக்கு 83 வீதமான ஆண்கள். 17 வீதமானோரே பெண்கள். தற்கொலை செய்துகொண்டவர்களில் கணிசமானோர் கல்வி கற்ற தரப்பினர் என்பதுடன் உயிரிழந்தவர்களில் 40 வீதமானவர்கள் சாதாரண தரத்தில் சித்தி அடைந்து உயர்தரத்தில் கல்வி கற்றவர்களாவர்.

இதேவேளை தற்கொலை செய்து கொண்டவர்களில் 22 வீதம் பேர் பட்டப்படிப்பை முடித்துள்ளனர். தற்கொலை செய்துகொண்டவர்களில் 35 வீதமானவர்கள் வேலையில்லாதவர்கள் என அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

வேலைவாய்ப்பின்மை மற்றும் பொருளாதார சிக்கல் காரணமாக இளைஞர்கள் பலர் தற்கொலைக்கு முயற்சிக்கின்றனர் எனத் தெரிய வந்துள்ளது. உளரீதியாக பாதிக்கப்படும் அவர்கள் வாழ்க்கை போராட்டத்திற்கு முகம் கொடுப்பதற்கு பதிலாக தற்கொலை செய்துக்கொண்டு உயிரை மாய்ப்பதற்கு தீர்மானிக்கின்றனர். இலங்கையில் இளைஞர்களே அதிகளவில் பொருளாதாரம் மற்றும் வேலைவாய்ப்பின்மை போன்ற பிரச்சினைக்கு முகம்கொடுக்கின்றனர். - என்று பிறிதொரு ஆய்வறிகை தெரிவிக்கின்றது.

உலகில் தற்கொலை செய்துக் கொள்வோரின் அதிகமான சதவீதம் ஆசிய பிராந்தியத்திலேயே பதிவாகி வருவதாக தேசிய மனநல சுகாதார நிறுவனத்தின் பிரதிப்பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

அந்த ஆசியப் பிராந்தியத்தில் அந்தப்பிரச்சினையினால் அதிகம் பாதிக்கப்படும் தரப்பாக இலங்கை உள்ளது.

இலங்கையில் தற்கொலைக்கு எதிரான விழிப்புணர்வு நடவடிக்கைகள் முழுமூச்சாக முனெடுக்கப்பட வேண்டிய ஒரு கட்டத்தில் நாடு உள்ளது.

# வலுப்பெறும் காற்றழுத்தத் தாழ்வுப் பகுதி: தமிழகத்தில் 17 ஆம் திகதி வரை மழை



தென்தமிழகம் மற்றும் தென்மேற்கு வங்கக்கடல் பகுதிகளின் மேல் வளிமண்டல கீழடுக்கு சுழற்சிகள் நிலவுகின்றன. மத்திய கிழக்கு அரபிக் கடல் பகுதிகளில் நிலவிய ஆழ்ந்த காற்றழுத்தத் தாழ்வு பகுதியானது, அதே பகுதியில் நிலைகொண்டுள்ளது.

இது மேலும் மேற்கு – வடமேற்கு திசையில் நகர்ந்து, இன்று காலை மத்திய அரபிக் கடல் பகுதியில் காற்றழுத்த தாழ்வு மண்டலமாக வலுபெறக்கூடும். இதனால் தமிழகத்தில் அடுத்த 5 நாள்களுக்கு கனமழை பெய்ய வாய்ப்பு உள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இது குறித்து சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில்,

“தென்தமிழகம் மற்றும் தென்மேற்கு வங்கக்கடல் பகுதிகளின் மேல் வளிமண்டல கீழடுக்கு சுழற்சிகள் நிலவுகின்றன. நேற்று முன்தினம் மத்திய கிழக்கு அரபிக் கடல் பகுதிகளில் நிலவிய ஆழ்ந்த காற்றழுத்தத் தாழ்வு பகுதியானது, நேற்று காலை அளவில் அதே பகுதியில் நிலைகொண்டுள்ளது.

இது மேலும் மேற்கு – வடமேற்கு திசையில் நகர்ந்து, இன்று காலை வாக்கில் மத்திய அரபிக் கடல் பகுதியில் காற்றழுத்த தாழ்வு மண்டலமாக வலுபெறக் கூடும்.

இதனால், தமிழகத்தில் அநேக இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும், இடி, மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்ய வாய்ப்பு உள்ளது. கோவை மாவட்ட மலைப்பகுதிகள், நீலகிரி, தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை, அரியலூர் மற்றும் பெரம்பலூர் மாவட்டங்களில், காரைக்கால் பகுதியில் ஒருசில இடங்களில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளது.

இன்று தமிழகத்தில் அநேக இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும், இடி, மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்ய வாய்ப்பு உள்ளது. திருப்பூர் மற்றும் கோவை மாவட்ட மலைப்பகுதிகள், நீலகிரி, திண்டுக்கல், தேனி, மதுரை, விருதுநகர், புதுக்கோட்டை, சிவகங்கை மற்றும் ராமநாதபுரம் மாவட்டங்களில் ஒருசில இடங்களில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளது.” என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

## வேலைநிறுத்தம் வாபஸ்:

# 12 நாள்களுக்கு பின்னர் கடலுக்கு சென்ற மீனவர்கள்!

இராமேசுவரம் மீனவர்கள் தொடர் வேலைநிறுத்தத்தை வாபஸ் பெற்று 12 நாள்களுக்கு பின் நேற்று மீன்பிடிக்கச் சென்றனர்.

இராமேசுவரம் மீன்பிடி துறைமுகத்திலிருந்து மீன்பிடிக்கச் சென்று கடந்த மாதம் 29 ஆம் திகதி எல்லை தாண்டி மீன் பிடித்ததாக 17 மீனவர்களுடன் இரண்டு விசைப்படகுகளை இலங்கை கடற்படையினர் சிறைப்பிடித்தனர்.

அதனையடுத்து இம்மீனவர்களை விடுதலை செய்யக் கோரி, இராமேசுவரம் மீனவர்கள் கடந்த மாதம் 30 ஆம் திகதியிலிருந்து தொடர் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டு வந்தனர்.

இந்த நிலையில் கடந்த 10 ஆம் திகதி மீனவர்கள் 17 பேருக்கும் தலா .50 ஆயிரம் ரூபா (இலங்கை ரூபா) அபராதம் விதித்து, அனைவரையும் விடுதலை செய்து மன்னார் நீதிமன்றம் உத்தரவிட்டது.

மீனவர்கள் விடுதலை செய்யப்பட்டதையடுத்து, இராமேசுவரம் மீனவர்கள் தொடர் வேலை நிறுத்த போராட்டத்தை வாபஸ் பெற்றனர். இந்நிலையில், 12 நாள்களுக்கு பிறகு, 361 விசைப்படகுகளில் நேற்று மீனவர்கள் வழக்கம் போல் மீன்பிடிக்க கடலுக்குச் சென்றனர்.

இதுகுறித்து இராமேசுவரம் அனைத்து விசைப்படகு மீனவ சங்க தலைவர் ஜேசுராஜா தெரிவிக்கையில்,

“மீனவர்கள் விடுதலை செய்யப்பட்டதையடுத்து வேலை நிறுத்தத்தை வாபஸ் பெற்றோம்.



எல்லை தாண்டி மீன்பிடித்த வழக்கில் கைது செய்யப்பட்ட 17 மீனவர்களை விடுதலை செய்ய நடவடிக்கை எடுத்த மத்திய, மாநில அரசுகள், இந்திய தூதரகம் மற்றும் மீனவர்களுக்கான அபராதத்தொகையை தங்களது சொந்த பணத்திலிருந்து செலுத்திய மீன்வளத்துறை அமைச்சர் அனிதார ராதாகிருஷ்ணன் மற்றும் ராமநாதபுரம் எம்.எல்.ஏ. காதர்பாட்சா முத்துராமலிங்கம் ஆகியோருக்கு நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.

அதேபோல் மத்திய, மாநில அரசுகள், சிறை தண்டனை விதிக்கப்பட்டு இலங்கை சிறையில் உள்ள எஞ்சிய மீனவர்களையும் விடுதலை செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். இருநாட்டு மீனவர் பேச்சுவார்த்தை உடனடியாக நடத்தி மீனவர் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு ஏற்படுத்துவதுடன், நடுக்கடலில் மீன்பிடிக்கும் மீனவர்களுக்கு பாதுகாப்பு அளிக்க வேண்டும்.” என்று கோரிக்கை விடுத்தார்.



# 50 ஆண்டுகளுக்கு பின் சஹாராவில் வெள்ளம்

சுமார் 50 ஆண்டுகளுக்குப் பின்னர், பலத்த மழை காரணமாக சஹாரா பாலைவனத்தில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது.

சஹாரா பாலைவனப் பகுதியில் இவ்வாறான வெள்ளப் பெருக்கு ஏற்படுவது இதுவே முதல்முறை எனவும் குறிப் பிடப்பட்டுள்ளது.

வருடம் முழுவதிலும், பெய்ய வேண்டிய மழை ஓரிரு நாள்களில் பெய்ததால் சஹாரா பாலைவனத்தில் வெள்ளம் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த திடீர் மழையால் சஹாரா பாலைவனத்தில் உள்ள இரிக்கி என்ற வறண்ட ஏரியில் நீர் நிரம்பியுள்ளதாக சர்வ தேச ஊடகங்கள் குறிப்பிட்டுள்ளன.

திடீர் மழை வெள்ளத்தால் நிரம்பிய இரிக்கி ஏரியின் காட்சிகள் கொண்ட புகைப்படங்களை நாசா விண்வெளி ஆய்வு நிலையம் வெளியிட்டுள்ளது.

30 ஆண்டுகளுக்குப் பின்னர் குறைந்த நேரத்தில் இவ்வாறான மழைவீழ்ச்சி பதிவாகியுள்ளதாக மொராக்கோ வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.














# இஸ்ரேலுக்கு உதவினால் நிலைமை மோசமாகும்

## ஈரான் எச்சரிக்கை

ஈரானுக்கு எதிராக தாக்குதல் நடத்த, எந்தவொரு சூழலிலும், இஸ்ரேலுக்கு உதவி செய்ய வேண்டாம் என அரபு நாடுகளுக்கு ஈரான் எச்சரித்துள்ளது.

இந்த எச்சரிக்கையானது நேற்று ஈரானின் மூத்த தலைவர் அயத்துல்லா அலி கமேனியினால் விடுக்கப்பட்டுள்ளதாக வெளிநாட்டு ஊடகங்கள் தெரிவித்துள்ளது.

மேலும், இது தொடர்பில் ஈரானின் மூத்த தலைவர் தெரிவிக்கையில்.

“லெபனான், இஸ்ரேல் தாக்குதல் நடத்தி வருகிறது. ஈரானில் ஹமாஸ் தலைவர் கொல்லப்பட்டதற்கு பதிலடி கொடுக்கும் வகையில், இஸ்ரேல் மீது ஈரான் ஏவுகணை தாக்குதல் நடத்தியது.

இதற்கு தகுந்த பதிலடி கொடுக்கப்படும் என இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு எச்சரிக்கை விடுத்திருந்தார்.

மத்திய கிழக்கில் நிலவி வரும் பதற்றமான சூழ்நிலைக்கு, மத்தியில் அரபு நாடுகள், இஸ்ரேலுக்கு உதவ வேண்டாம்.

அரபு நாடுகள் தங்களின் வான்வழி மற்றும் இராணுவ தளங்களை இஸ்ரேலிய தாக்குதலுக்கு பயன்படுத்த அனுமதித்தால் அதனை ஏற்றுக் கொள்ள முடியாது.

அதற்கான தக்க பதிலடி கொடுக்கப்படும். இஸ்ரேலுக்கு உதவினால் நிலைமை மோசமாகும். ”என்று அவர் கூறியுள்ளார்.

இதேவேளை, லெபனானில் உள்ள ஐக்கிய நாடுகள் சபையின் செயல்பாடுகளின் மீது இஸ்ரேலிய ஆயுதப்படைகள் நடத்தும் தாக்குதல்களை கடுமையாக விமர்சித்து கண்டிப்பதாக ஸ்பெயின் பிரதமர் தெரிவித்துள்ளார்.

கடந்த வருடம் ஒக்டோபரில் இருந்தே இஸ்ரேலுக்கு ஆயுதங்கள் விற்பனை செய்வதை ஸ்பெயின் துணிச்சலுடன் நிறுத்தியுள்ளதாக தெரிவித்துள்ள ஸ்பெயின் பிரதமர், சர்வதேச நாடுகளும் துணிந்து முடிவெடுக்க வேண்டும் என்றும், மத்திய கிழக்கில் அமைதி திரும்ப அதுவே உறுதியான தீர்வு எனவும் தெரிவித்துள்ளார்.











# தமிழரசின் தனிப் பயணம் சுமந்திரனின் வெற்றி தோல்வியை ‘இறுதி’ செய்யும் தேர்தல்!



புருஜோத்தமன் தங்கமயில்

இலங்கைத் தமிழரசுக் கட்சி ‘தனித்து’ தன்னுடைய வீட்டுச் சின்னத்தில் 47 ஆண்டுகளுக்குப் பின்னர் இந்தப் பொதுத் தேர்தலில் களம் காண்கிறது. ஏற்கனவே, கடந்த ஆண்டு அறிவிக்கப்பட்டு, ரணில் அரசாங்கத்தினால் ஒத்திவைக்கப்பட்ட உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் நடைபெற்றிருந்தால், அது தமிழரசுக் கட்சியின் தனிப் பயணத்தின், மீள்வருகையாக பதிவாகியிருக்கும். இந்தத் தேர்தலில் தமிழரசுக் கட்சியை வெற்றியடைய வைத்து, தங்களின் தனியாவர்த்தனத்துக்கான அங்கீகாரத்தை மக்கள் வழங்குவார்கள் என்று அந்தக் கட்சியின் முடிவெடுக்கும் தலைமை நம்புகின்றது. குறைந்தது எட்டு நாடாளுமன்ற ஆசனங்களைப் பெறுவது கட்சியின் எதிர்பார்ப்பு அதிகபட்சம் 12 ஆசனங்கள். இந்த எண்ணிக்கையைவிட குறைவான ஆசனங்களை தமிழரசுக் கட்சி பெறுமானால், அதன் ஒட்டுமொத்தப் பொறுப்பையும், இப்போது கட்சியின் நிழல் தலைவராக செயற்படும் எம்.ஏ.சுமந்திரன் ஏற்கவேண்டி வரும். அது, அவருக்கு கட்சிக்குள் பெரும் நெருக்கடியை வழங்கி, அவரின் அரசியல் வாழ்வின் முடிவுரையை எழுதும் சூழலை ஏற்படுத்தலாம்.

தமிழரசுக் கட்சியின் தலைவர் தேர்தலில் நாற்பதுக்கும் அதிகப்படியான வாக்குகளினால், சிவஞானம் சிறீதரனிடம் தோல்வியடைந்த சுமந்திரன் இன்றைக்கு கட்சிக்குள் அதியுச்ச அதிகாரங்களோடு இருக்கிறார். அது, மறைந்த சம்பந்தன், தமிழரசுக் கட்சியின் தலைவராகவோ, கூட்டமைப்பின் தலைவராகவோ கொண்டிராத அதிகாரத்தின் அளவைக் கொண்டிருக்கின்றது. சுமந்திரனைக் கேளாமல் எதுவும் கட்சிக்குள் நடைபெறாது என்ற நிலை இன்றைக்கு வந்துவிட்டது. அதுவும் கடந்த ஜனாதிபதித் தேர்தல் காலத்தோடு, சுமந்திரனுக்கு கட்சிக்குள் இருந்த நெருக்கடிகள் எல்லாமும், அவரின் எதிரிகளாலேயே இல்லாமல் செய்யப்பட்டுவிட்டன. கட்சிக்குள் அவரை எதிரியாக நினைத்துக் கொண்டிருந்தவர்களே, அவரிடம் கட்சியை தங்கத் தாம்பாளத்தில் வைத்து வழங்கியிருக்கிறார்கள். கட்சியின் வட்டாரக் கிளை தொடங்கி, கட்சியின் இறுதி முடிவு வரை சுமந்திரனின் இணக்கம், தலையீடு இன்றி எடுக்கப்படுவதில்லை என்ற கட்டம் வந்துவிட்டது.

இந்தத் தேர்தலுக்கான வேட்புமனுக்கள் யாவும் சுமந்திரனின் இணக்கத்தோடுதான் இறுதி செய்யப்பட்டிருக்கின்றன. அவர், யார் ஒருவருக்கு தேர்தலில் போட்டியிடும் வாய்ப்பை நிராகரிக்க நினைத்தாரோ, அவருக்கான சந்தர்ப்பம் மறுக்கப்பட்டிருக்கின்றது. அதில், சிறீதரனும் விதிவிலக்கல்ல. சிறீதரனை யாழ்ப்பாண தேர்தல் மாவட்டத்தின் வேட்பாளராக அறிவிப்பதற்கு சுமந்திரன் எதிர்ப்பினை வெளியிட்டார் என்பது வெளியில் அறிவிக்கப்பட்டாலும், அதன் நேரடி உண்மை அதற்கு மாறானது. சிறீதரன், சங்கு சின்னத்திற்காக கடந்த ஜனாதிபதித் தேர்தலில் 20,000 வாக்குகளை கிளிநொச்சியில் பெற்றார். அது தனிப்பட்ட ரீதியில் அவரின் படுதோல்விதான். ஆனால், யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டத்துக்கான வாக்குகளில் சிறீதரனை வெளித்தள்ளுவதன் மூலம் 20,000 வாக்குகள் இழக்கப்படுவதை சுமந்திரன் விரும்பவில்லை. அதனால்தான், அவர் நியமனக் குழுக் கூட்டத்தில் சிறீதரனை எதிர்ப்பதாக காட்டிக் கொண்டாலும், பெரும்பான்மையினரின் விருப்பத்தின் பேரில், அவரை வேட்பாளராக முன்னிறுத்துவதாக காட்டிக் கொண்டார். அது சிறீதரனுக்கும் அவரின் ஆதரவாளர்களுக்கும் கூடத் தெரியும். நியமனக் குழுவில் இருந்த பதினொரு பேரில், எட்டுப் பேர் சுமந்திரன் அணியினர் என்று கொள்ளலாம். அதில், கட்சித் தலைவர் மாவை சேனாதிராஜா, சிறீதரன், சண்முகம் குகதாசன், சி.வி.கே.சிவஞானம் ஆகியோர் தவிர்ந்து சுமந்திரனோடு சேர்த்து ஏழு பேர் அவரின் நிலைப்பாட்டுக்கு மாறாக எந்த முடிவுக்கும் ஆதரவினை வழங்கமாட்டார்கள் என்ற நிலை இருந்தது. சிறீதரனை வெளித்தள்ள வேண்டுமாக இருந்தால், அதனை சுமந்திரன் இலகுவாக செய்திருப்பார். அதனை அவர் உள்ளூரை வெறுத்தார். அதற்கு இன்னொரு எளிய தேர்தல் கணக்கொன்றும் இருந்தது. அதாவது, சுமந்திரனால் வேட்பாளர் நியமனம் நிராகரிக்கப்பட்ட சசிகலா ரவிராஜ், கே.வி.தவராசா, ஈ.சரவணபவன் உள்ளிட்டவர்களோடு வெளித்தள்ளப்பட்டு சிறீதரனும் இணைந்திருந்தால், அது தமிழரசுக் கட்சிக்கான வாங்கு வங்கியில் யாழ்ப்பாணத்தில் பெரும் இடறலை ஏற்படுத்தியிருக்கும். அதனை தவிர்ப்பதற்கு சிறீதரனை கட்சிக்குள் வைத்திருப்பது அவசியமானது. அதன்போக்கில் சுமந்திரன், ‘இந்த விடயத்தில்’ நின்று நிதானித்து(!) இயங்கியிருக்கிறார். கட்சித் தலைவரான மாவை, தன்னுடைய நிலைப்பாடுகளை நியமனக்குழுவுக்குள் சொல்ல முடியாத பொம்மையாக நின்றார். அவர், பரிந்துரைத்த யாரையும் வேட்பாளராக அறிவிக்கும் நிலையில், சுமந்திரன் இல்லை. அதனால்தான், அவர் வெறுப்படைந்து கட்சியின் தலைமைப் பதவியை துறப்பதாக ஊடகங்களில் அறிவித்தார். மாவை, பதவியைத் துறந்தாரா இல்லையா என்பது அவருக்குத்தான் வெளிச்சம். ஏனெனில், அவரின் பதவி துறப்புக்கான கடிதம், பதில் செயலாளருக்கு இந்தப் பத்தி எழுதப்படும் வரையில் கிடைக்கவில்லை.

யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டத்துக்குள் ஜனநாயக தமிழரசுக் கூட்டமைப்பு என்கிற பெயரில் சுமந்திரனால், வேட்பாளர் நியமனம் மறுக்கப்பட்டவர்கள் சிலர் இணைந்து சுயேட்சைக் குழுவாக போட்டியிடுகிறார்கள். அதில், ஒரு எதிர்பார்க்காத வரவு, பசுமை இயக்கத்தின் பொ.ஐங்கரநேசன் மட்டுமே. அவர், தன்னுடைய கட்சியை தேர்தல் திணைக்களத்தில் பதிவு செய்யும் நடைமுறைகளின் போக்கில், இந்தத் தேர்தலை அணுகுவதாக தெரிகின்றது. ஏனெனில், அவரின் தேசிய பசுமை இயக்கத்தின் அடையாளமாக மாம்பழத்தை வைத்துக் கொண்டிருக்கிறார். தொடர்ச்சியாக மூன்று தேர்தல்களில் போட்டியிடுவதன் மூலம், தேசிய பசுமை இயக்கத்தை தனிக்கட்சியாக அங்கீகாரம் கோரும் நோக்கம் அவரிடம் இருக்கலாம். அதுதான், மாம்பழச் சின்னம் கோரலுக்கான பின்னணியும் கூட.

2015 ஜனாதிபதித் தேர்தல் காலத்தில், கட்சியின் முடிவுக்கு எதிராக நின்று ஊடகங்களில் கருத்துரைத்தார்கள் என்ற

தொடர்ச்சி▼





# தமிழரசின் தனிப் பயணம் சுமந்திரனின் வெற்றி தோல்வியை 'இறுதி' செய்யும் தேர்தல்!

தொடர்ச்சி▲

பெயரில் இளைஞர் அணியின் தலைவராக இருந்த சிவகரன் உள்ளிட்ட சிலர் கட்சியிலிருந்து இடைநிறுத் தப்பட்டார்கள். அப்போது, சிவகரன் ஜனநாயக தமிழரசுக் கட்சி என்று தன்னையும் தன் சார்ந்தவர்களையும் அடை யாளப்படுத்தி வந்தார். அவ்வாறான சூழலில், ஜனநாயக தமிழரசுக் கட்சி அடையாளத்தை, தவராசா, சரவணபவன் குழுவினர் எடுத்துக் கொண்டால், ஊடக வெளிப்படுத்தலில் சிக்க வேண்டி வரும் என்கிற நிலையில், அவர்கள் ஜனநா யக தமிழரசுக் கூட்டமைப்பு என்ற நாமகாரணத்துக்குள் சென்றிருக்கலாம். பசுமை இயக்கத்தைச் சேர்த்துக் கொண் டிருப்பதன் மூலம், கூட்டமைப்பு என்ற விடயத்தையும் அவர்கள் தர்க்க ரீதியாக நியாயப்படுத்த முயன்றிருக்கலாம். இன்றைக்கு ஜனநாயக தமிழரசு நாமம் சூடிய குழுவினர், ஏற்கனவே 'இளைஞர் அலை' என்கிற பெயரில் கடந்த காலத்தில் குழு அமைத்திருந்தார்கள். கிட்டத்தட்ட அது, சுமந்திரன் எதிர்ப்பு அணிக்குள் இருந்து நிழலாக இயங்கிக் கொண்டிருந்தது. அந்தக் குழுவின் பெரும்பாலோனோர், இப்போது ஜனநாயக தமிழரசு சுயேட்சைக் குழுவின் வேட்பா ளர்களாக இருக்கிறார்கள். இந்தக் குழுவினரின் வருகை, யாழ் தேர்தல் களத்தில் யாருக்கு பின்னடைவை ஏற்படுத் தும் என்று நோக்கினால், தமிழரசுக் கட்சிக்கு சில ஆயி ரம் வாக்குகளை இழக்கப்பண்ணலாம். குறிப்பாக, தீவக (மக்கள்) மற்றும் வட்டுக்கோட்டைத் தொகுதி வாக்குகளில் சேதாரங்களை ஏற்படுத்தலாம். அதனால், சுமந்திரனுக்கு பெரிய பின்னடைவுகள் ஏற்படும் என்று கருத வேண்டிய தில்லை. ஏனெனில், இந்தச் சுயேச்சைக்குழு களம் காணாது இருந்திருந்தால், அவர்களின் ஆதரவாளர்கள் தமிழரசுக்கு வாக்களித்திருப்பார்கள். அத்தோடு, விருப்பு வாக்கினை சிறீதரனுக்கு வழங்கியிருப்பார்கள். ஆனால், இப்போது, இவர்களின் தனி சுயேச்சைக் குழுப் பயணம், சிறீதர னின் விருப்பு வாக்குகளில் ஒரு சில ஆயிரங்களையாவது குறைக்கும் நிலை ஏற்பட்டிருக்கின்றது.

யாழ்ப்பாண தேர்தல் மாவட்டத்தின் வேட்பாளர்கள் ஆரம்பத்திலேயே அறிவிக்கப்பட்ட பின்னணியில், சிலரை வெளிப்படையாக வெளியே தள்ளும் நோக்கம் இருந்தது. அதில் முக்கியமானவர் சசிகலா ரவிராஜ். அவர், கடந்த தேர்த லில் தன்னுடைய தோல்விக்கு சுமந்திரன் காரணம் என்ற தோற்றத்தை ஏற்படுத்தி அனுதாபத்தைத் தேடிக் கொண் டவர். அவ்வாறான நிலையில், சசிகலாவை அனுமதிக் கக் கூடாது என்பதில் சுமந்திரன் உறுதியாக நின்றார். அதன்மூலம், அவர் தமிழ் மக்களுக்கு சொல்ல வேண்டிய செய்தியொன்றை ஒருசில நாள்களிலேயே சொல்லியதாக வும் நம்புகிறார். அதாவது, சசிகலா, கொள்கை கோட்பாட்டு ரீதியான அரசியல்வாதியல்ல. அவர் பதவிகளுக்கான நபர். அதற்காக அவர் யாருடனும் கூட்டுச் சேர்வதற்கு தயாரா வார். அப்படிப்பட்ட ஒருவருக்கான அனுதாபம் தேவையற் றது என்பது, அது. இப்போது, சசிகலா, ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியின் வேட்பாளர். அவர் 'சங்கு'ச் சின்னத் தில் தேர்தலை எதிர்கொள்கிறார். அதுவும், தமிழ்ப் பொது வேட்பாளரின் சின்னத்தை ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியினர் அபகரித்துவிட்டதாக, தமிழ் மக்கள் பொதுச் சபையே, குற்றஞ்சாட்டிக் கொண்டிருக்கிற நிலையில், அந்த அணியில் சசிகலா இணைத்திருக்கிறார். அதனால், அவர் அதிகமாக விமர்சிக்கப்படுகிறார். சிலவேளை, அவர் சிலநாள்கள் காலம் தாழ்த்தி, ஜனநாயக தமிழரசு என்று அடையாளப்படுத்தும் சுயேச்சை அணியோடு இணைந்தி ருந்தால், அவர் ஏற்கனவே ஏற்படுத்தி வைத்திருந்த அனுதா பம், வாக்குகளாக மாறியிருக்கும். இப்போது, அதற்கான வாய்ப்புக்கள் மிகக்குறைவு.

கடந்த காலத்தில், சிறீதரனுக்காக களம் ஆடிய யாருக்கா கவும் அவரினால் ஆதரவாக நிற்க முடியவில்லை. தனக்கான ஆசனத்துக்காகவே சிறீதரன் போராடி வேண்டியிருந்த நிலை யில், மற்றவர்களுக்காக அவரினால் போராடக் கோரு வதில் தர்க்க நியாயம் இல்லைத்தான். மட்டக்களப்பில், சிறீ தரனின் ஆதரவாளராக அறியப்பட்ட, பொது வேட்பாளர் விடயத்தில் சேர்ந்து 'சங்கு' நாதம் எழுப்பிய சிறீநேசனுக் கான, வேட்பாளர் நியமனமே, சுமந்திரன் – சாணக்கியன் இணையினால்தான் இறுதி செய்யப்பட்டது. இறுதிநாக்களில் சிறீநேசன், சணக்கியனோடு இணக்கமான மனநிலையை வெளிப்படுத்தத் தலைப்பட்டார். அவர், ஊடக சந்திப்பை நடத்தி, சங்குக் கூட்டணியை விமர்சிக்கவும் செய்தார். தமிழரசுதான் தாய்வீடு, வீடுதான் சின்னம் என்றெல்லாம் அவர் சொல்ல வேண்டி வந்தது. அதன்மூலம், அவர் பொது வெளியில், தன்னை தாழ்த்திக் கொண்டு, வேட்பாளராவ தற்கான நிலைகளைச் செய்து முடித்தார். அதனால், அவர் நியமனம் பெற்றார்.

இப்போது யாழ்ப்பாண தேர்தல் மாவட்டத்து வேட்பாளர்க ளில் சிறீதரன், தந்தை செல்வாவின் பேரன் இளங்கோவன் தவிர்த்து ஏனைய ஏழு பேரும் சுமந்திரன் அணியினர் என்று கொள்ளலாம். அது, அவரின் வெற்றியை இலகுபடுத்த லாம். இப்போது சுமந்திரன் எதிர்ப்பு அணியினர் தமிழரசுக் கட்சிக்குள் அமுங்கிப் போய்விட்டார்கள். இன்னும் சிலரோ வெளியேறிவிட்டார்கள். குறிப்பாக, யாழ்ப்பாணத்துக்குள் சிலர் வெளியேறிவிட்டார்கள். ஏனைய மாவட்டங்களில் அந்த நிலை இல்லை. தமிழரசு ஓரணியில் நிற்கின்றது. கடந்த பொதுத் தேர்தலில், சொந்தக் கட்சிக்காரர்களில் அநேகர் தன்னைத் தோற்கடிக்கும் முனைப்புக்களில் முழுவதுமாக ஈடுபட்டிருக்க, அதனைச் சமாளிப்பதே, சுமந்திரனுக்கு பெரும் வேலையாகிப் போனது. ஆனால், இம்முறை அதற் கான வாய்ப்புக்களை அவர் வெட்டிக் குறைத்திருக்கிறார். இனி, தமிழரசுக்குள் இருந்து கொண்டு இந்தத் தேர்த லில் சுமந்திரன் எதிர்ப்புப் பிரச்சாரம் செய்யும் துணிவு யாருக்கும் இருக்காது. ஏற்கனவே, ஜனாதிபதித் தேர் தல் காலத்தில் சங்குக்கு வாக்குக் கேட்டவர்களின் பரிதாப நிலை, அண்மைய படிப்பினையாக அமையும். அதனால், கட்சிக்கு வெளியில் இருப்பவர்களை, மாற்றுக் கட்சிகளை எதிர்கொள்வது மாத்திரமே சுமந்திரனுக்கான வேலையாக இருக்கும். அதனை, தன்னால் இலகுவாக சமாளிக்க முடியும் என்று அவர் நம்புகிறார். ஏனெனில், தேர்தல் மேடைக ளில், தன்னை யார் குறிவைத்து தாக்கினாலும், அவர்களை

தொடர்ச்சி▼

# தமிழரசின் தனிப் பயணம் சுமந்திரனின் வெற்றி தோல்வியை 'இறுதி' செய்யும் தேர்தல்!

தொடர்ச்சி▲

'ஆயுதக் குழுக்கள், ஒட்டுக் குழுக்கள், சங்குத் திருடர்கள், சாராயக்கடை முகவர்கள் மற்றும் பதவி வெறியர்கள்' என்று சொல்லிவிட்டு அவர் கடப்பார். அந்த பதிலடி, யாழ்ப்பாணத்தைத் தாண்டி வடக்குக் கிழக்கில் முழுவதுமாக எடுபடும். அதுபோக, யாழ்ப்பாணத்துக்கு வெளியில், வன்னி, திருகோணமலை, அம்பாறை இறுதியாக மட்டக்களப்பு என்று நான்கு தேர்தல் மாவட்டங்களிலும் தமிழ் மக்களின் ஒருங்கிணைந்த வாக்களிப்பு நடைபெறவில்லை என்றால், அது ஏனைய சமூகத்தினரின் – இனத்தினரின் வெற்றிக்கான வாய்ப்புக்களை உருவாக்கும். அப்படியான கட்டத்தில், தமிழ் மக்களிடம் தமிழரசுக் கட்சியை நோக்கிய ஒருங்கிணைவுக் கோசம், முக்கிய தேர்தல் பிரச்சாரமாக எழும். அதனை, தமிழரசுக் கட்சி பெரும்பாலும் அறுவடையும் செய்யும்.

சாராயக்கடை அனுமதிப்பத்திரங்களைப் பெற்றவர்கள் விடயம் தமிழ் தேர்தல் களத்தில் முக்கியமானது. விக்னேஸ்வரனும், சாள்ஸ் நிர்மலநாதனும் அதில் ஆதாரங்களோடு மாட்டிக் கொண்டுவிட்டார்கள். அனுமதிப்பத்திரங்களைப் பெற்ற சிலர், தமிழ்த் தேசிய அரசியலில் இம்முறையும் வேட்பாளர்களாக இருப்பதான சந்தேகம் உண்டு. சில வேளை, அவை ஆதாரங்களாக வெளியாகும் பட்சத்தில், அதன் பலனையும் தமிழரசுக் கட்சி கணிசமாக அறுவடை செய்யும். ஏனெனில், ஆரம்பம் முதலே, தமிழரசுக் கட்சிக்குள் சுமந்திரன் அணியினர் என்று அறியப்பட்ட தரப்பினர், சாராய அனுமதிப்பத்திரங்கள் பெற்றவர்களை வெளிப்படுத்தும் நிலைப்பாட்டோடு இருந்தார்கள். அப்படியானால், இந்த சாராய அனுமதிப்பத்திர விடயத்தில் அவர்களின் கை சுத்தம் என்பது அர்த்தம். அப்படியான நிலையில், அந்த விபரங்கள், அநுர அரசாங்கத்தினால் வெளிப்படுத்தப்பட்டாலும், அது சுமந்திரனுக்கு வலுச்சேர்க்கும்.

செங்குத்தாக பிளவுபட்டிருந்தாக கடந்த ஒரு வருட காலமாக தெரிந்த தமிழரசுக் கட்சி, இப்போது கிட்டத்தட்ட ஓரணிக்குள் வந்துவிட்டது. சுமந்திரன் தனிப்பட்ட ரீதியில் யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டத்தில் வென்று, கட்சி தனித்து எட்டு ஆசனங்களைத் தாண்டிவிட்டால், இனி அவர் தமிழரசின் ஏக தலைமையாக மாறுவார். அது, அந்தக் கட்சியின் ஜனநாயக அம்சங்களை சிலவேளை, கேள்விக்குள்ளாக்கலாம். இன்னொரு கட்டத்தில் கூட்டுத் தலைமைக்கான



ஜனநாயக வாதத்தின் பக்கத்தில் தமிழ்த் தரப்பு ஒருபோதும் நின்றதில்லை என்ற சாட்சிகளின் போக்கில், ஒற்றைத் தலைமைக்கான தேடலை செய்யலாம். அதனை சுமந்திரன் அடைந்தால், சிலவேளை தமிழரசுக் கட்சி புதிய பாய்ச்சல் பெறலாம். அதற்கான வாய்ப்புக்கள் உண்டு. ஏனெனில், அவருக்கு எதிரான பக்கத்தில் இருப்பவர்கள் ஒன்றிணையவோ, ஆளுமையோடு போட்டிக் களத்தினைக் கையாளவே தெரியாமல் தடுமாறுகிறார்கள். அதனால்தான், சுமந்திரனின் வெற்றிகள் இலகுவாக்கப்பட்டு அவரிடம் சேர்கின்றன. அதனை, இறுதிக் காலத்தில் மறைந்த சம்பந்தன் தெளிவாக உணர்ந்தும் வைத்திருந்தார். அதுதான், அவர், தலைமைப் பதவிக்கான போட்டியை தவிர்ப்பதற்கும், சிறீதரனிடம் அதனை வழங்க நினைத்ததற்கும் காரணம்.

இந்தத் தேர்தலில் சுமந்திரன் தோல்வியடைந்தால், அவர் தேசியப்பட்டியல் என்ற மாற்று வழிகளைத் தேட மாட்டார் என்று நம்புகிறேன். அப்படி நாடினால், அது அவரின் படுதோல்வியாக முடியும். அது, அவரை, இன்று இருக்கும் நிலையில் இருந்து தூக்கித் தூர வீசும். கடந்த ஜனாதிபதித் தேர்தல் மாத்திரமல்ல, இந்தப் பொதுத் தேர்தலும் வடக்கு – கிழக்கில் சுமந்திரனின் தனிப்பட்ட வெற்றி தோல்வியை தீர்மானிக்கும் கட்டங்களுக்குள் சுருங்கிவிட்டது. அது ஆரோக்கியமான அரசியலுக்கான செய்தி அல்ல.

# இலங்கை தமிழரசுக் கட்சியின் வேட்பாளர்கள் அறிமுக விழா




இலங்கை தமிழரசுக் கட்சியின் யாழ்ப்பாண தேர்தல் மாவட்ட வேட்பாளர் அறிமுக விழா இன்று இடம்பெறவுள்ளது.

யாழ்ப்பாணம் தந்தை செல்வா அரங்கம் இன்று பிற்பகல் 3.00 மணியளவில் இந்த நிகழ்வு இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வில், கட்சி ஆதரவாளர்கள், பொதுமக்கள் அனைவரும் கலந்து சிறப்பிக்குமாறு இலங்கை தமிழரசுக் கட்சி அழைப்பு விடுத்துள்ளது.

# தமிழரசுக் கட்சியின் எதிர்காலமும் தமிழ்த் தேசியத்தின் இருப்பும் கேள்விக்குறியே!


- வி.எஸ்.சிவகரன் -

தமிழ்த்தேசியம் என்பது பெரும்பான்மையான தமிழ் மக்களின் இதயத்துடிப்பாக இனத்துவ அடையாளத்தையும், மொழித்துவ உரிமையையும், பண்பாட்டியல் விழுமியத்தையும், வாழ்வியல் செல்நெறியில் நின்று அறத்தையும், ஒழுக்கத்தையும், வீரத்தையும், விவேகத்தையும், சுதந்திரத்தையும் ஒப்புவிக்கின்ற ஒரு கூட்டு மரபுசார் வெளிப்பாடாகவே இத்தனை ஆண்டுகளாகத் தமிழ் மக்கள் மத்தியிலே பெருவிருப்புப் பெற்று இருந்தது.

அதனை காலத்துக்கு காலம் பலர் அபகரிக்க முனைந்த போதும் கூட தமிழ்த்தேசியம் தன்னை புதுப்பித்துக் கொண்டு உயிர்ப்பித்து வீறு கொண்டு எழுந்தது. விரும்பியோ விரும்பாமலோ யாவரும் அதனை பின்தொடர வேண்டிய நிர்ப்பந்தமும் ஏற்பட்டது. பல்வேறு விதமான நெருக்கடிகளைக் கடந்தும் வெளிப்படுத்த முடியாத உணர்வுகளை உள்ளுக்குள் தேக்கி வைத்த படியும் பலர் ஆத்மார்த்தமாக விருப்பு கொண்டிருந்தனர். மக்களினுடைய கூட்டு உணர்வும் சிந்தனையும் நோக்கு நிலையின் குவியத்தில் ஒத்த கருத்துரிமையில் மையம் கொண்டிருந்ததன் விளைவாக இலகுவாக அந்த நிலையை மக்கள் பின் தொடர்ந்தனர். கால நீட்சி பல்வேறு விதமான தந்திரங்களை கற்றுக் கொடுத்தது. அவை எல்லாம் எதிர்காலத்தில் எவ்வாறான விழுமிய மாற்றத்திற்கு உதவப் போகின்றன



என்று பலருக்குப் புரியவில்லை.

அவ்விதமான வலிமையான கோட்பாட்டோடு நிலை நிறுத்தப்பட்டிருந்த தமிழ்த்தேசியத்தை அரசியல் கட்சிகள் தூய நோக்கோடு பின்பற்றி ஒழுகவில்லை என ஆயுதரீதியில் எழுச்சி கொண்ட இயக்கங்கள் பல பரிணாமங்களில் மேலெழுந்தன. அதில் விடுதலைப் புலிகள் மட்டும் சமூக அந்தஸ்திலும் மக்கள் மனங்களில் விருப்புக்கும் உள்ளாகியது. தூய நோக்கமும் விடுதலை அறவுணர்வு சிந்தனையும் ஒருங்கிணைந்து வீறு கொண்டு எழுந்ததினால் தமிழ் மக்கள் மத்தியிலே பேராதரவு பெருகியது. தமிழ்த்தேசியத்தின் காப்பாளர்களாகவும் தமிழின விடுதலையின் மூலவர்களாகவும் அவர்கள் தோற்றம் பெற்றார்கள்.

முள்ளிவாய்க்கால் முடிவோடு மீண்டும் தமிழ் மக்கள், கட்சி அரசியல் சகதிக்குள் பெருவெறுப்பு இன்றி நுழைய வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. அதனை தமிழரசு கட்சி தலைமையிலான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தனதாக்கிக் கொண்டது. காலநீட்சி ஒன்றரை தசாப்தம் கூட தாக்குப் பிடிக்க முடியவில்லை. சம்பந்தனின் அந்திம காலத்திலேயே உள்ளக முரண்பாடுகள் வெளிப்படையாகவே தோற்றம் பெற்று அவருடைய மறைவுக்குப் பின்னர் அது பூதாகரமாகிவிட்டது. நடைபெற்ற ஜனாதிபதி தேர்தலில் தங்களுடைய ஐக்கியத்தையும் ஒரே கொள்கை நிலைப்பாட்டையும் வெளிப்படுத்தாமல் அவரவர் நலன் அடிப்படையில் ஆதரவு தெரிவித்தனர். அது நாடாளுமன்றத் தேர்தல் வரை நிலைக்கவில்லை. வேறு விதமான காட்சிகள் மாறின. சுயநலமும் பதவி சுகபோகமும் சந்தர்ப்பவாதமும் இரண்டக வார்த்தைகளும் அவர்களோடு ஒட்டிப் பிறந்தவை அல்லவா?

அரசியல் என்றால் இது எல்லாம் சர்வ சாதாரணம் என்கின்ற நிலையெளயே விடுதலை அரசியல் என புறப்பட்டவர்களும் வெளிப்படுத்துகின்றனர். மிக நீண்ட காலமாக தமிழ்த்தேசிய அரசியலைத் தனது பிடிக்குள் வைத்திருந்த தமிழரசு கட்சி இன்று சிதறிப் போய்விட்டது. நான்கு ஆண்டுகள் கடந்தும் ஒரு நிரந்தர செயலாளரை நியமிக்க முடியவில்லை. 6 ஆண்டுகளாக கட்சியினுடைய மகாநாடு நடத்தி புதிய தலைவர் தேர்வு செய்ய முடியவில்லை. அண்மையில் நடந்த கட்சித்தலைவர் தெரிவும் நீதிமன்றத்தில் உள்ளது. தற்போது கட்சி என்கின்ற ஒன்று இருக்கிறதா என்கின்ற கேள்வி எழுகிறது. ஒரு காலத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் உதயசூரியன் சின்னம் தமிழ் மக்களினுடைய ஏகோபித்த சின்னமாகவும் தேசியத்தின் அடையாளமாகவும் வட்டுக்கோட்டை தீர்மானத்தை தனதாக்கிக் கொண்ட சின்னமாகவும் தமிழ் மக்கள் மத்தியிலே ஒரு விடுதலை உணர்வையும் விருப்பையும் தனதாக்கிக் கொண்டதாக காணப்பட்டது. அச்சின்னம் 2004 இல் நீதிமன்றம் சென்று ஆனந்தசங்கரி தனதாக்கி கொண்டதன் பின்னர் அந்த சின்னம் ஒரு துரோகத்தின் அடையாளமாக மக்கள் மத்தியிலே ஆதரித்த தரப்புகளாலேயே எதிர்ப் பிரச்சாரம் செய்ய வேண்டிய பரிதாப நிலை ஏற்பட்டது.

அவ்விதமான ஒரு நிலையே இப்பொழுது வீட்டு சின்னத்துக்கும் ஏற்பட்டிருக்கிறது. தமிழர்களின் அடையாளமாக விடுதலைப் புலிகளால் அடையாளம் காட்டப்பட்ட சின்னம் என்கின்ற போர்வையிலே விருப்பு வெறுப்புகளை எல்லாம் கடந்து தமிழ் மக்கள் வாக்களித்து வந்தனர். அதை தார்மீக பொறுப்போடு அந்தக் கட்சி பாதுகாக்க தவறிவிட்டது. தான் தோன்றித்தனமாக எடுத்த தீர்மானங்களும் தூரநோக்கு இலட்சியமின்றி விடுதலை அரசியல் கொள்கை கோட்பாடு எதுவும் இன்றி வழிப்போக்கு அரசியலுக்குள் சிக்கித் தவிக்கிறது. இதற்கு நல்ல உதாரணம் இந்த தேர்தலுக்கு வேட்பாளர் தெரிவு, கட்சியின் தலைவரே பதவி விலகும் நிலைக்கு ஏற்படுத்தியிருக்கிறது. சிலர் வெல்ல வேண்டும் என்பதற்காக தோற்றுப் போகும் வேட்பாளர்களை வேண்டுமென்றே களமிறக்குகின்ற நிலையை ஏற்படுத்தி இருக்கிறார்கள். வேள்வியிலே பலியாகும் ஆட்டுக்கடாக்கள் போல் பலர் களத்துக்கு வந்திருக்கிறார்கள். பலவீனமான வேட்பாளர்களை வைத்து ஒரு கோட்பாட்டின் அடிப்படையில் வெற்றி பெறுவதற்கு இவர்கள் ஒன்றும் ஜெயலலிதா அல்ல. அ.இ.அ.தி.மு.கவின் வேட்பாளர்கள் மிகச் சாதாரணமாக இருப்பார்கள், அதற்கு ஜெயலலிதா கூறும் காரணம் 234 தொகுதிகளிலும் தானே போட்டியிடுகிறேன் என்கின்ற நம்பிக்கையில் வாக்களியுங்கள்



என்று அறிவிப்பார். அவ்விதமான நம்பிக்கையை கட்டி எழுப்பக்கூடிய நிலையில் தமிழரசு கட்சியில் இன்று யாரும் இல்லை. வாக்கு கவர்ச்சி உள்ள தலைவர்கள் இல்லை. தமிழ்

தொடர்ச்சி▼

# தமிழரசுக் கட்சியின் எதிர்காலமும் தமிழ்த் தேசியத்தின் இருப்பும் கேள்விக்குறியே!



தொடர்ச்சி▲

மக்களின் நம்பிக்கையைக் கட்டமைக்க கூடிய வகையில் எவரும் இல்லை. சிறிதரனும் சுமந்திரனும் தங்களது இரண்டு குழுக்களுக்கே தலைமை தாங்குகிறார்கள். இருவரும் ஒட்டுமொத்தமாக கட்சிக்கு தலைமை தாங்குபவர்களாக இல்லை. நிதானமும், சகிப்புத்தன்மையும், விட்டுக் கொடுப்பும், முரண்பாடு தவிர்ப்பும், ஒரு கூட்டு செயல்பாட்டிற்கு எல்லோரையும் அனுசரித்து எதிர்த்தவர்களையும் உள்ளீர்த்து விடுதலை என்கின்ற நோக்கோடும் வெற்றி என்கின்ற இலக்கோடும் கட்சியை கட்டமைக்க கூடிய வல்லமையும், இலக்கும், இலட்சியமும் இருவரிடமும் கிஞ்சித்துமில்லை. இருவரும் வட்டார அரசியலை மேற்கொள்கிறார்கள்.

இந்தத் தேர்தல் ஏறக்குறைய சுமந்திரன் தமிழரசு கட்சியின் தலைவர் என்கின்ற நிலையை எடுத்துக்காட்டுகிறது. தனது முகத்தை காட்டி எவ்வளவு வாக்கெடுக்கலாம் என்பதற்கு இந்த தேர்தல் முடிவுகள் சுமந்திரன் எதிர்கால தலைமையை நோக்கி நகர்வதற்குரிய கருத்துக்கணிப்பாக அமையும். இவர்களின் நம்பிக்கையீனங்களால் தமிழரசு வீட்டு சின்னத்தில் தேர்தல் கேட்பதற்கு நூற்றுக்கணக்கானவர்கள் காத்திருந்த காலம் காணாமல் போய் இப்பொழுது வீட்டுச் சின்னத்தில் தேர்தல் கேட்பதற்கு வேண்டாம் என ஓடுகின்ற சம்பவங்கள்தான் வடக்கு கிழக்கிலே இடம் பெற்றன. மிகவும் வேதனைக்குரிய விடயம், எவ்வளவு ஆழமாக தமிழ் மக்கள் விசுவசித்த ஒரு சின்னத்தில் தேர்தல் கேட்க மறுக்கிறார்கள் என்றால், இந்தத் தலைவர்கள் நம்பிக்கை அற்றவர்கள் என்பது இதைவிட வேறு என்ன சான்று வேண்டும்?

உதயசூரியன் நிலைமை விட்டுச் சின்னத்திற்கும் ஏற்பட்டு விட்டதோ! அல்லது ஏற்பட்டு விடுமோ என்கின்ற அச்சம் எழுகிறது. பல இடங்களிலே வேட்பாளர் இல்லாமல் தமிழரசு கட்சிக்காரர்கள் மிகவும் தடுமாறியுள்ளனர். அதிலும் மன்னாரில் பரிதாபகரமான நிலைமை ஏற்பட்டது. எல்லா வேட்பாளர்களும் பின் வாங்கி விட்டார்கள். மட்டக்களப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் மன்னாரில் வேட்பாளர் போடுகின்ற வங்குரோத்து நிலைமை ஏற்பட்டிருக்கிறது. மூன்றாவது ஆளைப் போட முடியாமல் வவுனியாவுக்கு வழங்கி விட்டார்கள். மன்னாரில் கேட்கின்ற இரண்டு வேட்பாளர்களும் ஒரே ஊரைச் சேர்ந்தவர்கள். மன்னாரில் அதிகம் கத்தோலிக்கர்கள் செறிந்து வாழ்வதனால் அவர்களுள் ஒரு வல்லமையுடையவரை வேட்பாளராக்க முடியாதமை இவர்களின் தேர்தல் வியூகத்தில் மிகவும் பின்தங்கி இருக்கிறார்கள் என்பதைக் காட்டுகின்றது. கட்சியை விட தனிப்பட்ட வேட்பாளரினுடைய அறிமுகமும்

செல்வாக்கும், ஆளுமையும், பணமும். மதமும் தாக்கம் செலுத்தும். இதனை தமிழரசு கட்சிக்காரர்கள் புரிந்து கொண்டவர்களாக இல்லை. பெயரளவிலே தெரிவுக்குழு நியமித்தார்கள். ஆனால் வேட்பாளர் தேடியது என்னவோ உள்ளூராட்சி மன்றத்திற்கு ஆள் தேடுவது போல் காணப்பட்டது. கடந்த காலத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்களாக இருந்தவர்கள் மீது கடுமையான அதிருப்தி மக்கள் மத்தியிலே நிலவுகின்ற சூழலைப் புரிந்து கொண்டு பலர் விலகிக் கொண்டனர். சிலர் விலகாமல் தாங்களே நாடாளுமன்ற உறுப்பினர்களாகத் தொடரவேண்டும் எனக் களம்காண்கின்றனர். பாவம் வாக்காளர்கள். தமிழரசுக் கட்சி எவ்வித மான சித்தாந்தத்தை அடிப்படையாக முன்வைத்து தேர்தல் விஞ்ஞாபனம் தயாரிக்கப் போகிறது?

மக்கள் மத்தியில் எப்படிப் பரப்புரை மேற்கொள்ளப் போகிறார்கள் என்பது இப்பொழுது பெரிய கேள்வி. நிலைகுலைந்து, சீர் கெட்டு, ஆளுக்கு ஆள் தோற்கடிக்க வேண்டும் என உட்கட்சிக்கு உள்ளே கங்கணம் கட்டி இருக்கும் கட்சியால் எப்படி ஒரு தேர்தலில் கூட்டாக பரப்புரை மேற்கொண்டு வெற்றி பெற முடியும்? ஜனாதிபதித் தேர்தலில் சங்கை ஆதரித்த சிறிதரன் தனக்கு வேட்பு மனு இல்லாமல் போய்விடுமோ என வாய்க்குள் முட்டையை விழுங்கியவர் போல் அமைதி காக்கிறார். தன் சகபாடிகளை கூட காப்பாற்ற முடியாத கையறு நிலையில் சுமந்திரன் அணியின் வலைக்குள் சிக்கிவிட்டாரோ? யாழில் நியமித்த ஒன்பது வேட்பாளர்களில் ஏழு பேர் சுமந்திரன் அணியை சேர்ந்தவர்கள். இந்த அணியின் மீது தமிழ் மக்களுக்கும் தமிழ்த்தேசிய வாதிகளுக்கும் இருக்கக்கூடிய வெறுப்புணர்வு மக்கள் மத்தியிலே எப்படி வாக்காக மாற்றப்போகிறார்கள்? எதிர்ப்பு வாக்குகளை அறுவடை செய்வதே அரசியலின் பிரதான தேர்தல் வியூகம். ஆனால் இங்கு யாரை யார் எதிர்ப்பது? யாரோடு யார் கூட்டுச் சேர்வது? யார் யாருக்கு எதிரி? யாருக்கு நண்பன்? யாருக்கு யார் துரோகி எனச் சொல்வது? இந்தக் கேள்விகளுக்கு எல்லாம் பதில் எங்கே தேடுவது? வரும் தேர்தலிலே தமிழரசு கட்சி மிக மோசமான பின்னடைவை சந்திக்க கூடிய ஏது நிலை காணப்படுகிறது.

பலவீனமான வேட்பாளர்கள், கட்சிக்குத் தலைமையின்மை, உட்கட்சியிலே பல்வேறு விதமான முரண்பாடு, பலர் மாற்றுக் கட்சிகளுக்கு வேட்பாளராகிவிட்டனர். சுயேச்சைக் குழுக்களிலும் களமிறங்கி விட்டனர். ஏனையவர்கள் எதிர்த்து ஊடக சந்திப்புகளை நடத்துகின்றனர். பல உறுப்பினர்கள் அமைதியாகிவிட்டனர். ஆகவே தமிழரசுக் கட்சியின் எதிர்காலம் என்ன? மக்கள் ஆதரவும் அபிப்பிராயமும் இழந்து விட்டால் அந்தக் கட்சி எந்த வகையிலும் காலத்துக்கு ஏற்றது போல் பொருத்தம் அற்றதாகவே நோக்கப்படும். இதனால் தமிழ் மக்களுக்கும் தமிழ்த்தேசிய அரசியலுக்கும் பல்வேறு விதமான பாதிப்பும் இழப்பும் ஏற்படப்போகின்றன. அதனை அவர்கள் புரிந்து கொண்டவர்களாக இல்லை. தங்கள் பதவிச் சண்டையைத் தமிழ் மக்கள் மேல் சுமத்த முனைகின்றனர். தமிழ் மக்களின் எதிர்காலம் என்ன? ஜனாதிபதி தேர்தலுக்கு கொள்கை, கோட்பாடு எல்லாம் அதிகம் பேசிக் கொண்டு வந்த முன்னாள் ஆயுத குழுக்கள் இப்பொழுது தாங்கள் எழுதிய ஒப்பந்தத்தில் இருந்து தாங்களே மீறி சங்கை அபகரித்துக் கொண்டனர் என புலம்புகின்றனர் பத்தியாளர்கள். தாங்கள் வரிந்து கொண்ட கொள்கையின் மீதும் தங்கள் கட்சியின் நடப்பு விவகாரத்தின் மீதும் நம்பிக்கை அற்று சின்னத்தை மாற்றுவதனால் மக்களின் எண்ணத்தை மாற்றி விடலாம் என சிறுபிள்ளைத்தனமாக சிந்தித்து தேர்தல் களத்துக்கு வந்திருக்கிறார்கள். மக்களால் தொடர்ந்து நிராகரிக்கப்பட்டவர்களும் பல ஆண்டுகளாக நாடாளுமன்றத்தில் இருந்து எந்தப் பயனும் இல்லாமல் சுயநலவாதிகளாக இருந்தவர்களும் மீண்டும் ஆதாய சூதாடிகளாக வலம் வருகிறார்கள்.

தமிழ் மக்களின் கூட்டு நம்பிக்கையை பெறக்கூடிய நிலையில் எந்தக் கட்சியும் இல்லை. எந்தத் தலைவரும் இல்லை. தமிழ் மக்கள் என்ன செய்வது? யாரை நம்புவது? யாருக்கு வாக்களிப்பது? தமிழ்த் தேசியம் என்பது இந்த தேர்தலில் ஒரு பேசு பொருளாக இருக்குமா? அப்படியாயின் யார் தமிழ்த்தேசியக் கட்சி? – இந்தக் கேள்விகளுக்கு எல்லாம் தலைவர்களிடமும் பதில் இல்லை. வாக்காளர்களிடமும் தெளிவில்லை.

விடுதலைக்காக போராடி இழக்க முடியாத இழப்புகளை எல்லாம் சந்தித்து ஏதிலிகளாக இருக்கும் இனத்தின் மீது பதவிச்சவாரி செய்கின்றன தமிழ்க்கட்சிகள். இந்த அழுக்காறு வேலையில் ஈடுபடுபவர்களை விடுதலைக்காக மரணித்த ஆத்மாக்கள் ஒருபோதும் மன்னிக்காது.

அரசியல் அறமற்ற – நெறிபிறழ்ந்த – சந்தர்ப்பவாத – தமிழ்த் தேசிய அரசியல் கட்சிகள் தமிழினத்தின் வீழ்ச்சியை தடுப்பதற்காக தேர்தலுக்குப் பின்னராவது மாற்று வழியைப் பற்றி சிந்திப்பதை தவிர வேறு வழி இருப்பதாக தெரியவில்லை.

# இன்றைய ராசி பலன்கள் -13.10.2024




இன்றைய நாள் நீங்கள் விரும்பத் தக்கதாக இருக்கும். உங்கள் இலக்குகளை எளிதில் அடைவீர்கள். இன்று பயனுள்ள திட்டங்களை தீட்டுவீர்கள். அது உங்களுக்கு சாதகமான பலன்களைத் தரும்.

உங்கள் பணியில் சாதகமான பலன்கள் கிடைக்கும். அதிகப்படியான பண வரவு ஊக்கத்தொகையாக கிடைக்க வாய்ப்புள்ளது.

உங்கள் அன்பை உங்கள் துணையிடம் வெளிப்படுத்துவீர்கள். உறவில் நல்லிணக்கம் காணப்படும்.

இன்று பணம் சம்பாதிப்பதற்கான வலுவான அடித்தளத்தை அமைத்துக் கொள்வீர்கள். உங்கள் சேமிக்கும் ஆற்றல் அதிகரிக்கும்.

உங்களிடம் காணப்படும் உற்சாகமான மன ஆற்றல் காரணமாக இன்று உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்றைய நாள் சுமூகமாகவும் வெற்றிகரமாகவும் அமைய நீங்கள் திட்டமிட்டு செயலாற்ற வேண்டும். உங்கள் புத்திசாலித்தனத்தை பயன்படுத்த வேண்டும். ஸ்ரீ லட்சுமி நரசிம்மரை வணங்குவதன் மூலம் மகிழ்ச்சி கிடைக்கும்.

இன்று உங்களுக்கு வெளியிலிருந்து ஊக்கம் கிடைக்காது. உங்களை நீங்களே ஊக்கப்படுத்திக் கொள்ள வேண்டும். திட்டமிட்டு செயலாற்றுவதன் மூலம் பணிகளை குறித்த நேரத்திற்கும் முடிப்பீர்கள். எதிர்பாராத வகையில் வரும் பணிகளையும் முடிப்பீர்கள்.

உறவு என்று வரும் போது நீங்கள் அதனை லேசாக கையாள வேண்டும். அன்பும் புரிந்து கொள்ளுதலும் உறவை சிறப்பாக்கும்.

பண வரவு குறைந்து காணப்படும். தேவையற்ற செலவுகளை எதிர்கொள்ள் நேரும். தேவையானவை மற்றும் தேவையற்றவை போன்றவற்றை சாதுர்யமாக அறிந்து கொள்ள வேண்டும். இதனால் பண இழப்பை தவிர்க்கலாம்.

விரைவில் உணர்ச்சிவசப்படுவீர்கள். இதன் வேகத்தை குறைத்தால் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்றைய நாள் பயனுள்ளதாக இருக்காது.என்றாலும்வருத்தப்படுவதைகுறைத்துக் கொண்டு, உங்களுக்கு விருப்பமான விஷயங்களுக்காக நேரத்தையும் திறமையையும் பயன்படுத்துங்கள். தியானப் பயிற்சி சிறந்தது. குழப்பங்களுக்கு இடம் கொடாமல் தெளிவாக எண்ண வேண்டும்.

உங்கள்நாளைதிட்டமிட்டுபணியாற்றுங்கள். பணிநிமித்தமான பயணம் காணப்படுகின்றது. உங்கள் அன்றாட பணிகளுடன் வேறு பணிகளையும் ஆற்றுவீர்கள்.

உங்கள் உணர்சிகளை முறையாக கட்டுப்படுத்த வேண்டும். இதனால் உறவுப் பிணைப்பு பாதிக்கப்படும்.

இன்று அதிர்ஷ்டமான நிதிநிலைமை காணப்படாது. பணம் சம்பாதிக்கும் திறமையை வளர்த்துக் கொள்ளுங்கள். கண்டிப்பாக நல்லது நடக்கும்.

முடிந்தவரை பதட்டமின்றி இருக்க முயலுங்கள். உடற்பயிற்சி அல்லது நடைப் பயிற்சி கால் வலியைக் குறைக்க உதவும்.




இன்று உங்கள் முயற்சிகளில் வெற்றி உங்களுக்கு சாதகமாக அமையும் நாள். மிகவும் அற்புதமான நாள். உங்கள் முடிவெடுக்கும் திறமையில் முன்னேற்றம் காணப்படும். உங்களிடம் உறுதி காணப்படும்.

உங்கள் பணியைப் பொறுத்தவரை சிறப்பான நிலையில் இருப்பீர்கள். உங்கள் மேலதிகாரிகளின் அங்கீகாரம் கிடைக்கப்பெறுவீர்கள். உங்களுக்கு புதிய வாய்ப்புகள் கிடைக்கும்.

உங்கள் கருத்துக்களை உங்கள் துணையுடன் இனிமையான முறையில் பகிர்ந்து கொள்வீர்கள். இதனால் உறவில் நல்லிணக்கம் பராமரிக்கப்படும்.

நிதி வளர்ச்சி சிறப்பாக இருக்கும். உங்கள் சேமிப்பு நிலை உயரும்.

இன்று மொத்தத்தில் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். நல்ல தேக ஆரோக்கியத்தை பராமரிப்பீர்கள்.




எந்த விஷயத்தையும் லேசாக எடுத்துக்கொள்ள வேண்டும். இன்று பொறுமை அவசியம். இன்று உங்கள் பொறுப்புகள் அதிகமாக காணப்படும்.

பணியிடத்தில் பரபரப்பு காணப்படும். திட்டமிட்டு முன்னுரிமைப்படி பணியாற்றினால் எல்லாப் பணிகளையும் எளிதாக முடிக்கலாம்.

ஒருவருக்கொருவர் பரஸ்பரம் அன்பை பரிமாறிக் கொள்வது, அதுவும் கஷ்ட நேரங்களில் பரிமாறிக் கொள்வது உறவில் மிகவும் அவசியம். அவர் விரும்பும் வகையில் நடந்து கொள்வது சிறந்தது.

சிறு கடன்கள் மூலம் உங்கள்அடிப்படை தேவைகளை எளிதாக சமாளிக்கலாம். உங்களிடம் அதிக பணம் இல்லாவிட்டாலும் இருக்கும் பணத்தில் எப்படி வாழ வேண்டும் என்று அறிந்திருப்பீர்கள்.

உங்கள் உடல் நலத்தை சீர்படுத்தி இயல்பு நிலைக்கு கொண்டு வருவதற்கு பணம் செலவு செய்ய நேரலாம்.




ஆன்மீக சொற்பொழிவுகள் கேட்டல் மற்றும் அடிக்கடி கோவிலுக்கு செல்வது மனதிற்கு ஆறுதல் தரும்.முக்கிய முடிவுகள் எடுப்பதை தவிர்க்கவும். தியானம் மேற்கொள்வது சிறந்த பலனைத் தரும்.

செயல்களை திட்டமிட வேண்டும் மற்றும் அதன்படி முடிக்க வேண்டும். அப்பொழுதான் அவை உங்கள் கட்டுப்பாட்டில் இருக்கும், தேவையற்ற செயல்கள் செய்வதை தவிர்க்க முடியும்.

உங்கள் துணையுடன் நல்லுறவு பராமரிப்பதில் கவனம் செலுத்த வேண்டும். உறவு சம்பந்தமான விருப்பு வெறுப்புகளைப் பற்றி உங்கள் துணையிடம் பேசி தெரிந்து கொள்ள வேண்டும். அதனால் நல்ல புரிந்துணர்வும் உறவுப் பிணைப்பில் வலுவும் ஏற்படும்.

பயணத்தின் போதும் பணத்தை கையில் கொண்டு செல்லும் போதும் கவனமாக இருக்க வேண்டும். பயணத்தின் போது குறைந்த அளவில் பணத்தை கையில் எடுத்துச் செல்லுங்கள்.

உங்கள் தாயின் ஆரோக்கியத்தை பராமரிக்க இன்று பணம் செலவு செய்ய நேரலாம்.




நீங்கள் அதிகப்படியாக செயலாற்றினால் வெற்றியைக் காண நேரலாம். உங்களின் நகை மற்றும் விலை மதிப்புள்ள பொருட்களை பாதுகாத்துக் கொள்ள வேண்டும். எச்சரிக்கையாக இருப்பதன் மூலம் பாதகமான விளைவு களை தவிர்கலாம்.

இன்று நன்மை தீமை இரண்டும் கலந்து காணப்படும். நீங்கள் சாதாரணமாக செய்வதை விட இன்று கூடுதலாக செயல் பட வேண்டும். என்றாலும் திட்டமிட்டு செயலாற்றினால் நீங்கள் நன்மை காணலாம். பணியின் தரத்தில் கவனம் தேவை. வேலை தொடர்பான பயணம் காணப்படுகின்றது.

உங்கள் துணையுடன் நட்பான அணுகுமுறை மேற்கொள்ளுங்கள். உங்கள் அன்பும் அரவணைப்பும் உங்கள் இருவருக்குமான உறவைவளர்க்கஉதவும்.உங்கள்துணையிடம்அன்பாகநடந்துகொண்டால் பதிலுக்கு அவரும் உங்களிடம் அன்பை வெளிபடுத்துவார்.

பணத்தை சேமிப்பது அதுவும் இன்று சேமிப்பது மிகவும் கடினமான ஒன்றாக இருக்கும். உங்கள் பொறுப்பு அதிகரிக்கும். உங்கள் செலவும் அதிகரிக்கும். எதை செய்ய வேண்டும் எதை தவிர்க்க வேண்டும் என்று அறிந்து செய்வது சிறந்தது.

இன்று தியானம் மேற்கொள்வதன் மூலம் இன்றைய நாள் அமைதியாக எந்த தடைகளுமின்றி காணப்படலாம். இன்று கால் வலி ஏற்படும் என்பதால் லேசான உடற்பயிற்சி மேற்கொள்வது சிறந்தது.




இன்று இனிமையான சாதகமான நாள். இன்று நல்ல பலன்களைக் காண்பீர்கள். இன்றைய நாளை முறையாக திட்டமிடவும். முக்கிய முடிவுகளை எடுக்கலாம்.

நீங்கள்எந்தப்பணிசெய்தாலும்அதில் இன்று வெற்றி கானபீர்கள். உங்கள் பணியைக் கண்டு உங்கள் மேலதிகாரிகள் பாராட்டுவார்கள்.

உங்கள் துணையுடன் பேசி அளவளாவுவீர்கள். இருவரும் ஒருவரையொருவர் நன்கு புரிந்து கொண்டு நடந்து கொள்வீர்கள். ஒருவரின் கருத்துக்கு மற்றவர் மதிப்பு அளிப்பீர்கள்.

பணம் அபரிமிதமாக காணப்படும். அதனை உங்களின் நலனுக்கு பயன்படுத்துவீர்கள். பணத்தை சிறந்த முறையில் செலவு செய்வீர்கள்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். உங்களிடம் காணப்படும் நேர்மறையான போக்கின் காரணமாக நீங்கள் ஆரோக்கியத்துடன் இருப்பீர்கள்.

# இன்றைய ராசி பலன்கள் -13.10.2024




இன்று உங்களுக்கு சிறப்பான நாள். உங்கள் அக்கம் பக்கத்தவரின் ஆதரவு கிடைக்கும். இன்று அனைத்தும் சிறப்பாகநடக்கும். இன்று நல்ல பலன்கள் கிடைக்கும்.

உங்கள் மேலதிகாரிகளின் ஆதரவு கிடைக்கும். அவர்கள் உங்களை பாராட்டுவார்கள். உங்கள் கடின உழைப்பு மற்றும் திறமை வெளிச்சத்திற்கு வரும்.

உங்கள் துணையுடன் விருந்து விசேஷங்களில் கலந்து கொள்ள வேண்டிய நேரம். இதில் நீங்கள் பங்கு கொண்டு மகிழ்வீர்கள். உங்கள் துணையிடம் மகிழ்ச்சியைப் பகிர்ந்து கொள்வீர்கள்.

வெளி நாட்டிலிருந்து பணம் கிடைக்க வாய்ப்புள்ளது. உங்களுக்கு தேவைப் படும் பொழுது அந்தப் பணம் கிடைக்கும்.

நேர்மறையான எண்ணம் மற்றும் திட்டமிடல் மூலம் இன்று பதட்டமின்றி இருக்கலாம். இதனால் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்று சிறப்பான பலன்கள் கிடைக்காது. என்றாலும் அமைதியாக செயல்களை கையாண்டால் சரியாக செயலாற்றலாம். செயல்களை பொறுமையுடன் கையாளுங்கள்.

இன்று முன் கூட்டியே திட்டமிடலும் அதன்படி நடந்து கொள்வதும் கடினமாக இருக்கும். பணிகளை சரியான விதத்தில் கையாண்டால் சுமை குறைவாகத் தெரியும்.

உங்களுக்கும் உங்கள் துணைக்கும் இது மறக்க முடியாத நாளாக இருக்கும். இருவருக்கும் இடையே நல்ல பிணைப்பு ஏற்பட இருவரும் அனுசரித்து நடந்து கொள்வீர்கள். நல்ல வார்த்தைகளை பரிமாறிக் கொள்வதன் மூலம் இன்றைய நாளை சிறந்ததாக ஆக்கலாம்.

நீங்கள் சம்பாதிக்கும் பணத்தை விட அதிகம் பணம் இன்று உங்களுக்கு தேவையாக இருக்கும். என்றாலும்சூழ்நிலையைப் புரிந்து கொண்டால் எது தேவை எது தேவையில்லை என்று அறிந்து நீங்கள் உணர்வீர்கள்.

உங்கள் தாயின் ஆரோக்கியத்திற்காக இன்று பணம் செலவு செய்ய நேரும்.




இன்று இறை வழிபாட்டில் ஈடுபடுங்கள். முக்கிய முடிவுகள் எடுப்பதை வேறு ஒரு நாளைக்கு தள்ளிப்போடுங்கள்.

பணியிடத்தில் திட்டமிட்டு வேலை செய்தால் பலன் கிடைக்கும். உங்களின் நேர்மறையான அணுகுமுறை காரணமாக அதிகப் பணிகளையும் எளிதாக கையாள்வீர்கள்.

உங்கள் துணையிடம் பேசும் போது புரிந்துகொண்டு பொறுமையாக பேச வேண்டும். உங்கள் வார்த்தைகள் தவறாகப் புரிந்து கொள்ள வாய்ப்புளதால் கவனமாகப் பேச வேண்டும். உங்கள் துணையிடம் அன்பாகப் பழகுவதன் மூலம் நேர்மறையான விளைவுகள் காணலாம்.

நீங்கள் அதிகமாக செலவு செய்வீர்கள். ஆனால் சிறப்பாக திட்டமிட்டால் பணம் குறைவாக செலவு செய்யலாம். தேவையற்ற செலவுகளை தவிர்க்கவும்.

உங்களை ஆரோக்கியமாக வைத்திருக்க உடற்பயிற்சி மேற்கொள்வது சிறந்தது. உங்கள் ஆரோக்கியத்தை நீங்கள் கவனமாக பார்த்துக் கொள்ள வேண்டியது அவசியம்.




நீங்கள் மகிழ்ச்சியாக காணப்படுவீர்கள். இன்று முக்கிய முடிவுகளை எடுக்கலாம். இன்று அதிர்ஷ்டம் உங்கள் பக்கம் இருக்கும். வெற்றியின் உச்சத்திற்கு செல்வீர்கள்.

உங்கள் திறமைக்கு அங்கீகாரம் கிடைக்கும். உங்கள் முயற்சி பாராட்டைப் பெறும். உங்களுக்கு கொடுக்கப்பட்ட பணி சிறியதாக இருந்தாலும் அதனை மகிழ்வுடன் சிறந்த முறையில் செய்வீர்கள்.

இன்று உங்களுக்கும் உங்கள் துணைக்கும் மிகவும் இனிமையான மகிழ்ச்சியான நாள். இருவரும் ஒருவரோடொருவர் நேரம் ஒதுக்கி கலந்து பேசலாம். அதே சமயத்தில் அமைதியைக் கையாள வேண்டும்.

இன்று கணிசமான பணம் சேமிப்பீர்கள். பங்கு வர்த்தகத்தின் மூலம் நல்ல பலன் கிடைக்கும்.

இன்று முழுவதும் நீங்கள் ஆரோக்கியமாக காணப்படுவீர்கள்.








SEYLAN
BANK PLC
The bank with a heart

# செலான் வங்கி முயற்சியாண்மை வணிகங்களுக்கான புதிய factoring நிதிச்சேவையை மீள ஆரம்பிக்கின்றது

செலான் வங்கியானது Seylan Factoring மூலம் அதன் பரந்த நிதிச் சேவையை மேலும் விரிவுபடுத்தியுள்ளது. இது வாடிக்கையாளர்களுக்கு நிலுவையில் உள்ள வர்த்தக வரவுகளை வர்த்தக பரிமாற்றம் செய்வதன் மூலம் நிதி திரட்டும் வழிமுறையாகும்.

பாரம்பரியக் கடன் வழங்கலைப் போலன்றி பரந்துபட்ட காரணிகள் மற்றும் திருப்பிச் செலுத்துவதற்கான ஆதாரங்களை கருத்திற் கொள்ளும் factoring முதன்மையாக பெறவேண்டியவைகளின் தரம் மற்றும் வசூலிப்பதற்கான வசதியை அமைப்பது ஆகியவற்றில் தங்கியுள்ளது.

Seylan Factoring மூலம் பணத்திற்கான விரைவான அணுகல், அதிகரித்த பணப்புழக்கம் மற்றும் விநியோகஸ்தர்கள் வழங்கும் ஆரம்ப கட்டண தள்ளுபடியை வாடிக்கையாளர்கள் பயன்படுத்திக் கொள்ளும் வாய்ப்பையும் பெறுவர். இந்தச் சேவையானது ஒரு வணிகத்தின் கடன் விலைப்பட்டியல் மதிப்பின் 80 வீதம் வரையான பெறுமதிக்கு சில மணிநேரங்களில் நிதியளிக்கிறது.

பணம் செலுத்திய பிறகு கடன் காலத்தின் முடிவில் மீதமுள்ள நிலுவைத் தொகை பெறப்படும். மேலும், இச்சேவை ஊடாக வாடிக்கையாளர்கள் கடன்படுனர்களிடம் முடக்கப்பட்ட பணத்தை விடுவிக்கலாம், தங்கள் வணிகத்தில் அதிகரித்த செயல்பாட்டு மூலதனத்தை மீண்டும் முதலீடு செய்யலாம் அல்லது சேகரிப்பு செயற்பாடுகள் மற்றும் விற்பனைப் பேரேடு நிர்வாகத்தை ஒப்பந்த அடிப்படையில் வெளிநபர்களுக்கு (outsource) கையளிக்கலாம். Seylan Factoring இற்கு நிலையான பிணையங்கள் (tangible securities) அவசியம் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.

வணிகத்தின் விற்பனைப் பேரேட்டை சிறப்பாகப் பராமரிக்கவும் தொழில்முறை ரீதியாக வசூலைப் பின்தொடர உதவவும் வங்கி, சிறப்பு ஊழியர்களை இச்செயற்பாட்டிற்காக ஒதுக்குகிறது.

SME கள் முதல் பெருநிறுவன வணிகங்கள் வரை எந்தவொரு வணிகமும் Seylan Factoring ஊடாக பாரம்பரிய மேலதிகப்பற்று மற்றும் கடன்களுக்கு அப்பாற்பட்ட செயல்திறனான, தொந்தரவற்ற வழிவகைகளை பின்பற்றுவதன் மூலம் அதன் பிரதிபலனை பெறலாம். Seylan Factoring, வணிகங்கள் தங்கள் பணப்புழக்கங்களை மேம்படுத்தி, சுமூகமாக செயற்பாடுகளை கொண்டு சென்று, தொடர்ச்சியான வளர்ச்சி மற்றும் விரிவாக்கத்திற்கு திட்டமிட உதவுகின்றது.

வியாபார புரள்வை பொருள்படுத்தாமல் தரமான பெறத்தக்கவைகளைக் கொண்ட வணிகங்கள் விண்ணப்பிக்கலாம். மேலும், தங்கள் தயாரிப்புகளை மற்ற வணிகங்களுக்கு கடனிற்கு விற்கும் வணிகங்கள் தகுதி பெறும். தாம் விரிவடைய வேகமான பணப்புழக்கம் தேவைப்படும் நிறுவனங்களும் இதில் அடங்கும். அதேபோன்று, ஒரு வணிகமானது அதன் வளர்ச்சியானது தற்போதைய கடன் வரம்பை விட முன்னோக்கி செல்லும் நிலையில் தன்னை இனங்கண்டால், Seylan Factoring வியாபாரத்தை தொடர்ந்து நடத்திச் செல்லும் ஒரு தெரிவாக மாறும்.

Seylan Factoringஐ தனது சேவைகளில் ஒன்றாக இணைத்து தனது சேவைகளை விரிவுபடுத்தும் செலான் வங்கியின் முடிவு, வியாபார வாடிக்கையாளர்களுக்கு பரந்த அளவிலான செயற்பாட்டு மூலதன நிதி தெரிவுகளை வழங்குவதற்கான வங்கியின் அர்ப்பணிப்புக்கான சான்றாகும். வசதியான வாடிக்கையாளர் சேவைகளை வழங்குவதில் முன்னணியில் இருக்கும் செலான் வங்கி, சிநேகபூர்வமான, வாடிக்கையாளர்களை திருப்திப்படுத்தும் சேவைகளை வழங்குவதில் உறுதியாக உள்ளது.

Ogilvy






# யூனியன் வங்கி வாடிக்கையாளர்களுக்காக யூனியன் அஷ்யூரன்ஸின் பிரத்தியேக அமர்வு

இலங்கையின் முன்னணி ஆயுள் காப்புறுதி சேவைகள் வழங்குநரான யூனியன் அஷ்யூரன்ஸ், யூனியன் வங்கியுடனான தனது பாங்கசூரன்ஸ் பங்காண்மையை மேலும் வலுப்படுத்தும் வகையில், பிரத்தியேகமான வாடிக்கையாளர் அமர்வுகள் தொடரை முன்னெடுக்கின்றது.

இதன் பிந்திய அமர்வுகள் யாழ்ப்பாணம் மற்றும் மாத்தறையில் முன்னெடுக்கப்பட்டன. இதில் யூனியன் வங்கி பாங்கசூரன்ஸ் வலையமைப்பைச் சேர்ந்த 100 இற்கும் அதிகமான யூனியன் அஷ்யூரன்ஸ் வாடிக்கையாளர்கள் மற்றும் வங்கியின் புதிய வாடிக்கையாளர்களும் கலந்து கொண்டனர்.

வாடிக்கையாளர்களின் நிதிசார் நலனை மேம்படுத்துவதில் இந்த அமர்வுகள் கவனம் செலுத்துகின்றன. பிரயோக அறிவு மற்றும் செயற்படுத்தக்கூடிய மூலோபாயங்களினூடாக, வாடிக்கையாளர்களுக்கு தகவலறிந்த நிதிசார் தீர்மானங்களை மேற்கொள்ள அறிவூட்ட யூனியன் அஷ்யூரன்ஸ் எதிர்பார்ப்பதுடன், அதனூடாக முன்னேற்றத்துக்கான அவர்களின் பயணத்துக்கு வலுவூட்டவும் எதிர்பார்க்கின்றது.

மேலும், இந்த அமர்வுகளினூடாக வாடிக்கையாளர்களுக்கு யூனியன் அஷ்யூரன்ஸ் மற்றும் யூனியன் வங்கி ஆகியவற்றின் சிரேஷ்ட முகாமைத்துவத்தைச் சேர்ந்தவர்களுடன் நேரடியாக தொடர்பை பேணுவதற்கான வாய்ப்பையும் வழங்கியிருந்தன. நிறுவனங்களுடன் அர்த்தமுள்ள வகையில் தொடர்புகளை ஏற்படுத்தவும், தமது உறுவுகளை வலிமைப்படுத்தவும் வாய்ப்பை வழங்கியிருந்தன.

அமர்வுகள் தொடர்பில் யூனியன் அஷ்யூரன்ஸ் பிரதம பங்காண்மை விநியோக அதிகாரி வத்சலா அளுத்கெதர கருத்துத் தெரிவிக்கையில்,

“எமது வாடிக்கையாளர்களின் நலனுக்கு தொடர்ச்சியாக ஆதரவளிக்கும் கட்டமைப்புகளை பெற்றுக் கொடுத்து பாங்கசூரன்ஸ் துறையில் புதிய நியமங்களை ஏற்படுத்துவதற்கான யூனியன் அஷ்யூரன்ஸின் நீண்ட கால அர்ப்பணிப்பின் எடுத்துக்காட்டாக இந்த வாடிக்கையாளர் அமர்வுகள் அமைந்துள்ளன. இந்த அமர்வுகளை முன்னெடுப்பதில் எமது நீண்ட கால பங்காளர்களில் ஒன்றாக யூனியன் வங்கியுடன் கைகோர்த்துள்ளதையிட்டு நாம் மகிழ்ச்சியடைகின்றோம். அதனுடாக எமது பகிரப்பட்ட வாடிக்கையாளர்களுக்கு பயனுள்ள பரிபூரண சேவைகளை பெற்றுக் கொடுக்க முடிந்துள்ளது.” என்றார்.

யூனியன் வங்கியின் நுகர்வோர் வங்கியியல் பிரிவின் சிரேஷ்ட உப தலைவர் சாயா ஜயவர்தன கருத்துத் தெரிவிக்கையில்,

“எமது வாடிக்கையாளர்களுக்கு பெருமளவில் அனுகூலமளிக்கக்கூடிய ஒரே கூரையின் கீழான பரிபூரண தீர்வுகளை பெற்றுக் கொடுப்பதில் யூனியன் அஷ்யூரன்ஸ் கவனம் செலுத்துகின்றது.

இந்நிலையில் யூனியன் அஷ்யூரன்ஸ் நிறுவனத்துடன் எமது பாங்கசூரன்ஸ் பங்காண்மையை ஏற்படுத்தியுள்ளதையிட்டு நாம் மிகவும் மகிழ்ச்சியடைகின்றோம். நிதிசார் அறிவை மேம்படுத்தும் திட்டங்களுக்கு ஆதரவளிப்பதனூடாக, எமது வாடிக்கையாளர்களின் நிதிசார் நிலையில் ஏற்படுத்தும் தாக்கத்தை நாம் நன்கு உணர்ந்துள்ளோம். சிறந்த பெறுமதி மற்றும் மேம்படுத்தப்பட்ட வாடிக்கையாளர் உறவுகளை பெற்றுக் கொடுப்பதற்கான எமது அர்ப்பணிப்பை இந்த அமர்வுகளின் வெளிப்படுத்தியுள்ளன.” – என்றார்.






# சர்வதேச இலங்கைக் காப்புறுதி உச்சி மாநாடு 2024 இல் உரையாற்றும் AIA குழுமத்தின் சுகாதாரப் பணிப்பாளர்












AIA குழுமத்தின் சுகாதாரப் பராமரிப்புப் பணிப்பாளர் Dr.கிறிஸ்டியன் வார்ட்ஸ் சமீபத்தில் ஷங்ரிலா கொழும்பில் நடைபெற்ற சர்வதேச இலங்கைக் காப்புறுதி உச்சி மாநாடு 2024 இல் உரையாற்றியிருந்தார்.

இன்றைய சிக்கலான மற்றும் மாற்றங்கள் நிறைந்த பொருளாதாரச் சூழலில் காப்புறுதி வழங்குநர்களின் வளர்ச்சியடைந்து வரும் பங்கினைப் பற்றிக் கலந்துரையாடுவதற்காக உலகளாவிய தொழில்துறைத் தலைவர்கள், காப்புறுதித் திட்ட வல்லுநர்கள் மற்றும் தொழில்துறை நிபுணர்கள் ஆகியோர் “சவால்கள் மற்றும் புதுமையான மாற்றங்கள் நிறைந்த பொருளாதாரச் சூழலில் காப்புறுதி வழங்குநர்களின் பங்கு” என்ற கருப்பொருளில் இங்கு ஒன்றுகூடி இருந்தனர்.

Dr.வார்ட்ஸ் ஆரோக்கியக் காப்பீடு, சுகாதாரப் பாதுகாப்பு மற்றும் சுகாதாரச் சேவைகள் உட்பட சுகாதாரப் பராமரிப்புத் துறையில் 25 வருடங்களுக்கும் அதிகமான சர்வதேச அனுபவத்துடன் “வளர்ந்து வரும் பிராந்தியப் போக்குகள் மற்றும் டிஜிட்டல் தழுவலுடன் வைத்தியக் காப்பீட்டின் எதிர்காலம்” பற்றிய தனது உள்ளார்ந்த அறிவினையும் இதன்போது பகிர்ந்து கொண்டிருந்தார். அவரது விளக்கக்காட்சி தொழில்துறையினை மாற்றியமைக்கும் முக்கிய போக்குகளை எடுத்துக்காட்டி இருந்ததுடன் பெறுமதி அடிப்படையிலான சுகாதாரப் பாதுகாப்பு, டிஜிட்டல் தீர்வுகளின் முக்கியத்துவம் மற்றும் சுகாதார இடர் நிர்வாகத்தை மேம்படுத்துவதில் பகுப்பாய்வு உள்ளறிவு மற்றும் வாடிக்கையாளர் அனுபவங்களை மேம்படுத்தி வழங்குவதற்காக சுகாதாரக் காப்புறுதியினை ஆரோக்கியப் பராமரிப்புச் சேவை விநியோகத்துடன் ஒருங்கிணைத்தல் ஆகியவற்றையும் உள்ளடக்கியிருந்தது.

நியூசிலாந்து மற்றும் இங்கிலாந்தில் மருத்துவப் பயிற்சியினை உள்ளடக்கிய அவரது விரிவான தொழில்சார் பின்னணியை இதன்போது எடுத்துரைத்து செயல்விளக்கியிருந்த Dr.வார்ட்ஸ் காப்புறுதி வழங்குநர்கள் பாரம்பரியமாகப் பணம் செலுத்துபவர்கள் என்ற நிலையிலிருந்து செயலூக்கமுள்ள சுகாதாரப் பங்காளர்களாக மாறுவதற்கான முக்கியமான தேவையினையும் இதன்போது மிகவும் வலியுறுத்தியிருந்தார்.

ஆசிய பசிபிக் பிராந்தியம் முழுவதுமுள்ள வாடிக்கையாளர்களின் அதிகரித்து வரும் தேவைகளை நிவர்த்தி செய்யும் தனிப்பயனாக்கப்பட்ட, தடுப்பு சுகாதாரப் பராமரிப்புச் சேவைகளை வழங்குவதற்கு தொழில்நுட்பத்தை மேம்படுத்துவதன் முக்கியத்துவத்தினையும் அவர் இங்கு வலியுறுத்திக் குறிப்பிட்டிருந்தார்.

இந்த குறிப்பிடத்தக்க உச்சி மாநாட்டிற்கு னுச.வார்ட்ஸ் இன் நிபுணத்துவத்தின் மூலமாக பங்களிப்பு வழங்கப்பட்டுள்ளதையிட்டு AIA இன்சூரன்ஸ் லங்கா மிகவும் பெருமிதம் கொள்வதுடன் ஆரோக்கியமான, நீண்ட ஆயுளுடன், மிகச் சிறந்த வாழ்க்கையினை மேம்படுத்துவதற்கான நிறுவனத்தின் பணியினை மீண்டும் உறுதிப்படுத்துகின்றது.

தற்போதைய சவால்கள் மற்றும் மாற்றங்கள் நிறைந்த பொருளாதாரச் சூழலில் நிறுவனம் தொடர்ந்தும் பயணிக்கும் போது பிராந்தியம் முழுவதும் உள்ள AIA இன்சூரன்ஸ் லங்காவின் வாடிக்கையாளர்களுக்கு சுகாதாரப் பராமரிப்பு மற்றும் காப்புறுதித் தரங்களை உயர்த்தும் முன்னோடியான முயற்சிகளுக்காக AIA தொடர்ந்தும் அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வருகின்றது.